


# வருடாந்த அறிக்கை 2011

cecb

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம்

**ம.பொ.உ.ப தூரநோக்கு**

'உலகத்தில் ஒரு முதல் தரப் பொறியியல் நிறுவனமாகத் திகழ்தல்'

**ம.பொ.உ.ப செயற்பணி**

மானிட வர்க்கத்திற்கு ஆகக்கூடிய நன்மைகளின் நிமித்தம் வளங்களின் பிரயோகப் பங்களிப்புக்காக பொருத்தமான முறையில் அதிகம் ஊக்குவிக்கப்பட்டதும், பயிற்சியளிக்கப்பட்டதும் தேர்ச்சி பெற்றதுமான ஒரு ஊழியர் படையைக் கொண்டு, அரச கலைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பொறியியல், கட்டடக்கலை மற்றும் கணிய அளவையியல் முதலிய துறைகளில் சிறப்புப் பெற்று உலகத்தில் முதல் தரப் பொறியியல் நிறுவனமாக விளங்குதல்.

***அதற்கும் அப்பால் நகர்தல்***

ம.பொ.உ.ப - என்பது மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகமாகும். இது, புத்தாக்க அணுகுமுறையைப் பின்பற்றி பல தொழிற்பாடுகளை மேற்கொண்டு இன்று இலங்கையில் உசாதுணை சார்ந்த பணியில் முதன்னிலை வகிக்கின்றது. மேலும் அபிவிருத்தியை நாடிய அபிலாஷையுடைய தொழில் தேர்ச்சியாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவையும் கொண்டு இது இயங்கி வருகின்றது.

அந்த அபிலாஷை ஒரு வரலாற்றைக் கொண்டு ஆரம்பமாகுகின்றது - ஒரு வரலாறு என்பது இரண்டு யுகங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு இந்த நாட்டின்


முன்னிலையில் எண்ணற்ற பல குறிப்புக்களைக் கொண்டதாகும். அதாவது இன்று அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் கஷ்டப்பட்டு விழித்தெழுந்த நேரத்தில் பரிணாமம் பெற்றதாகும்.


சில உயிரற்ற பொருட்கள் போலல்லாது, எமது ஆண்மாக்களுக்கு உயிரூட்டும் …. உணவளிக்கும் …. எமது உடலில் ஓடும் உயிர் நாடிகள் … போல், அதிர்ஷ்டவசமாக, அன்றைய அழியாத குறிப்புக்கள் அதாவது நாம் அடைந்த நீண்ட கால சுதேசிய பொறியியல் சாதனைகள் இன்றும்கூட எம்மிடம் இருக்கின்றன. நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள ஊழியர்களான ஆண் பெண் இருபாலாரிடத்திலும் இந்த அபிலாஷை வளர்ந்து நிறைந்து இருக்கின்றது.

ம.பொ.உ பணியகத்தில் நாம் அத்தகைய அபிலாஷைக்கு உயிரூட்டி வருகின்றோம்.

## நிதி சார் குறிப்புகள்

| | 2011 | | 2010 |
|---|---|---|---|
| | பிரிவு | ம.பொ.உ.ப | ம.பொ.உ.ப |
| | ரூ.மில். | ரூ.மில். | ரூ.மில். |
| நிர்மாணம் சார் வருமானம் | 9,974 | 7,663 | 5,104 |
| உசாதுணை சார் வருமானம் | 678 | 678 | 668 |
| திரண்ட வருமானம் | 10,652 | 8,341 | 5,772 |
| மொத்த இலாபம் | 977 | 942 | 1,425 |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | 367 | 361 | 666 |
| வரிக்கு பின்னருள்ள தேறிய இலாபம் | 203 | 199 | 416 |
| மொத்தச் சொத்துக்கள் | 12,714 | 10,235 | 5,078 |
| திரண்ட மூலதனம் | - | 500 | 500 |
| மொத்த ஒப்புரவு | 1,152 | 1,149 | 931 |
| மொத்த ஒப்புரவு சார் சமநிலை | 12,714 | 10,235 | 5,078 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 11,922 | 9,464 | 4,621 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 11,301 | 8,847 | 3,971 |



## தலைவரின் செய்தி

30 வருடங்களுக்கும் மேலாக ம.பொ.உ.ப ஊழியன் ஒருவனாக இருப்பதையும் 2005 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல் இந்தப் பணியகத்தின் தலைவராக இணைந்து இருப்பதையும் இட்டு தனிப்பட்ட ரீதியில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 2011 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் வருடாந்த அறிக்கையை முன்வைக்கும் இத்தருனத்தில் எனது நன்றிகள் அடங்கிய செய்தியை விடுக்கக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை இட்டும் பெருமைப்படுகின்றேன்.

இந்த நாட்டில் பொறியியல் துறையில் ஒரு உயர் அமைப்பாக விளங்கி ஒரு சுயாதீன நிறுவனமாக நாம் ஏறக்குறைய நாற்பது வருட காலத்தைக் கழித்துள்ளோம். எமது ஊழியர்கள் ஐக்கியமான சேவைகளை வழங்கவில்லையென்றால் இந்நாட்டில் இந்த மதிப்புமிக்க நிலையை எம்மால் அடையவும் மற்றும் சர்வதேச மட்டத்தில் எமது சேவைகளை விஸ்தரிக்கவும் எமக்கு முடியாதிருந்திருக்கும்.

தீர்மானம் எடுப்பதிலும் மற்றும் பணியகத்தின் தூரநோக்கை அடைவதில் செயன்முறை சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளுவதிலும் எமது முகாமைத்துவம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது. சகல விதமான பொறியியல் துறைகளிலும் எமது பணியகம் பிரத்தியேகமான ஒரு சாதனையை அடைந்துள்ளது. முகாமைத்துவத்தின் பொறியியல் சார்ந்த அம்சங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சில திறன்களை எமது துணை ஊழியர்களும் கொண்டுள்ளனர். உண்மையில், இது இந்தப் பணியகத்தின் ஒரு பெரும் சாதனையாக விளங்குகின்றது.

அண்மையில் வர்த்தகத்தில் அடைந்துள்ள இந்த வளர்ச்சியானது தலைமை அலுவலகம் தனது அபிவிருத்தியில் மைல்கல்லுடன் கூடிய சாந்தமான ஒரு குறிப்பைக் கொண்டு காணப்படுகின்றது. நாம் இந்த நாட்டில், வர்த்தகம் சார்ந்த சஞ்சிகைகளின் பல வர்த்தகப் பக்கங்களிலும், மற்றும் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளிலும் அதே நேரம் ஊடக நேர்காணல்களிலும் சாதனைகளைப் பதிந்துள்ளோம். கடந்த 4 வருடங்கள் தொடர்ச்சியாக முன்னோடி வர்த்தக சஞ்சிகையான LMD சஞ்சிகையினூடாக இலங்கையின் 20 மிகச்சிறந்த அரச உடமைத் தொழில்முயற்சிகளில் ஒரு தொழில்முயற்சியாக நாம் இடம் பிடித்துள்ளோம்.

சர்வதேசப் பிரிவு, ம.பொ.உ பணியகத்தை உலக வரைபடத்தில் இடம்பிடிக்கச் செய்வதற்கான மிக முக்கிய சாதனை சார் அம்சங்களை முன்னெடுத்து வருகின்றது. இந்தப் பிரிவு, ஏனைய நாடுகளினாலும் வர்த்தகத் திட்டங்கள் தொடர்பில் ஒருமுகப்பட்டுள்ள பல தெற்காசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கும் எமது பொறியியல்

திறன்களையும் பங்களிப்புச் செய்து வருகின்றது.



எமது இந்த வளர்ச்சியானது பொறியியல் சார்ந்த தீர்வின் தேவையைச் சமாளிக்கும் பொருட்டு நிதி, பொறியியல், கட்டடக்கலை மற்றும் ஏனைய தொழில்நுட்ப நிபுணத்துவம் என்பவற்றில் பாரிய முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

நிதி முகாமைத்துவம் அல்லது நிருவாகம் என்பவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படாமல், எமது துணை ஊழியர்களும் மற்றும் சிற்றூழியர்களும் கூட தொழில் சார் பலன்கள் நிறைந்த சூழலினுள் அபிவிருத்தி அடைந்துள்ளனர். இதுவே, எமது நாட்டைப் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டிற்கு அவசியமான மனித வள வகையாக விளங்குகின்றது. எமது பதவியணியிலுள்ள ஊழியர்கள் எதிர்காலத்தில் நாட்டிற்காகப் பணியாற்றுவதற்கு அதிகம் அதிகம் அர்ப்பணிப்பார்கள் என்பது எனக்கு ஐயமில்லை.

பணியகத்தில் காணப்படும் விவகாரங்களையும் இயக்க சார் செயற்பாடுகளையும் நிருவகிப்பதற்கு தங்களது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது அனைத்து ஊழியர்களினதும் பங்களிப்பு விலைமதிக்க முடியாதது என்பதால் அவர்களின் கடின உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் அவர்களுக்குத் தெரிவிக்கவும் விரும்புகின்றேன்.

பொறியிய. நிகால் ரூபசிங்க
தலைவர்

## பொது முகாமையாளரின் செய்தி

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் நிதிக் கூற்றுக்களையும் முன்வைக்கும் இத்தருனத்தில் இந்தச் செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுவான ஒரு கருத்தில் நோக்குகின்ற போது, சில பொருளாதார மீட்புடன் முடிவடைந்த இந்த ஆண்டைக் கொண்டு அரசியல் ஸ்தீரத்தன்மையும் பொருளாதார வளர்ச்சியும் நிறைந்த ஒரு காலப்பகுதியை இலங்கை அனுபவித்தது. நாட்டில் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, பல எண்ணற்ற முன்னரங்குகளில் அபிவிருத்திற்கான எண்ணற்ற வாய்ப்புகள் கிடைத்ததுடன், குறித்த ஆண்டு காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் துறைகளிலும் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை நோக்கி சாதகமான முறையில் அனைத்து வகையான பாரிய பொருளாதாரத் துறைகளும் பங்களித்ததன் மூலம், 2010 ஆம் ஆண்டு முதல் நிலையாக அடைந்த 8% வீத பொருளாதார வளர்ச்சியானது கடந்த மூன்று தசாப்தங்களினுள் நிலவிய அதிகப்படியான வளர்ச்சி வீதமாக விளங்குகின்றது.

ம.பொ.உ.ப இந்தப் பொருளாதார மறுமலர்ச்சியின் பயனாக்க கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தும் நல்ல நிலையில் காணப்பட்டது. அது செயலாற்றுகை ரீதியில் மிகவும் வெற்றிகரமான ஒரு ஆண்டையும் கொண்டிருந்தது. அதே நேரம் எதிர்பார்த்த வளர்சிகளையும் அடைந்தது. இந்தப் பணியகம் வட பகுதியில் புனரமைப்பு / மீள்நிர்மாணம் மற்றும் மனிதாபிமானம் ஆகியன சார்ந்த கருத்திட்டங்களைப் பொறுப்பேற்று, அரசாங்கத்திற்கு நம்பிக்கை வாய்ந்த பொறியியல் சேவை வழங்குநராக தொடர்ந்தும் முதல் தரப் பங்களிப்பை வகித்தது. எமது தலைவரினதும் பணிப்பாளர்கள் சபையினதும் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்கள், சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களின் உதவி, எமது பொறியியலாளர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் அர்ப்பணிப்பு என்பவற்றின் மூலம் ம.பொ.உ பணியகத்திற்கு வட பகுதியில் பாரிய கருத்திட்டங்களைப் பொறுப்பேற்று புதிய சவால்களையும் மற்றும் போட்டிகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது என்பதைத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆ.அ.வ நிதி அளித்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி அவசரக் (CARE) கருத்திட்டம் மற்றும் சீனா நிதி அளித்த வட பிராந்திய A9 வீதிகள் புனர்நிர்மாணக் கருத்திட்டம் போன்ற பாரிய பொறியியல் கருத்திட்டங்கள் சம்பந்தமான பணிகள் இந்த ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. வட பிராந்திய புகையிரத மற்றும் தென் பிராந்திய புகையிர மார்க்கங்கள் தொடர்பான கருத்திட்டங்களை விரைவில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நிதி ரீதியில், 940 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மொத்த இலாபத்தைக் கொண்டு 8.3 பில்லியன் ரூபா திரண்ட வருமானத்தை ஈட்ட முடிந்தது. எனினும், நிர்மாண மூலப்பொருட்களின் செலவு முன்னைய ஆண்டுகளை விடவும் அதிகமாகக் காணப்பட்டது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது குறைந்த ஒரு இலாபத்திற்கு ஏதுவாக அமைந்தது.



வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உதவும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் பிராந்திய அலுவலகங்களும், மற்றும் வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களில் தள அலுவலகங்களும் திறக்கப்பட்டதைக் கொண்டு பணியகம் காணி, கட்டிடங்கள், பாரிய இயந்திராதிகள் மற்றும் வாகனங்கள் என்பன தொடர்பில் தொடர்ந்தும் அதிகமான மூலதன முதலீடுகளைச் செய்தது. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கொள்வனவு 2010 ஆம் ஆண்டை விடவும் 70% வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இதனால் 2011 ஆம் ஆண்டில் நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமானம் 561.6 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. இது தவிர, மூலதனப் பணிகள் தொடர்பில் 145 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

கவர்ச்சியான ஊக்குவிப்புப் பொதிகளைக் கொண்டு ம.பொ.உ பணியகத்திற்கு தகுதியுடைய பொறியியலாளர்கள், கட்டடக்கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோரை அந்தந்தக் கருத்திட்டங்களினுள் ஈர்ப்பதற்கும், தக்கவைத்துக் கொள்ளுவதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பதற்கும் முடிந்தது. ஊழியர்களின் ஆற்றல்கள், திறன்கள் மற்றும் தொழில் வளம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு ஊழியர் பயிற்சி வலுப்படுத்தப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ம.பொ.உ.ப ஆளணி ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற தகுதியான ஊழியர்களை நிரந்தர ஆளணியில் உள்ளீர்ப்பதற்கு உதவியாக அமைந்தது. ம.பொ.உ.ப த.தொ.நு ஐ நிருவாக, முகாமைத்துவ மற்றும் நிதி முறைமைகளினுள் ஒன்றிணைக்கும் பொருட்டு விஷேட கவனம் செலுத்தியது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிவுறுத்தப்பட்டவாறு, ம.பொ.உ.ப சர்வதேச நிதி சார் அறிக்கையிடல் நியமங்களை (IFRS) அனுசரித்து இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (இ.க.நி) கணக்கீட்டு முறைமை சீராக்கப்பட்டது.

இன்றைய போட்டிச் சூழலினுள், மனித வளங்களின் தரம், இலாபகரமான தன்மை, நிலைபெறுதகு தன்மை மற்றும் அபிவிருத்தி என்பவற்றில் நாம் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகின்றோம். தரத்தின் மீது நாம் கொண்டுள்ள தொடர்ச்சியான அழுத்தத்தின் மூலம் இந்த ஆண்டு 9001:2008 எனும் முகாமைத்துவத் தரம் சார்ந்த சான்றிதழையும் மற்றும் ICTAD மதிப்பையும் பெற்றுள்ளோம். மதிப்புமிக்க LMD வர்த்தக சஞ்சிகையின் மூலம் நான்காவது வருடமும் அரச வகுதியில் 20 உன்னத நிறுவனங்களுக்கு மத்தியில் ம.பொ.உ.ப தரப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகால நிலைபெறுதகு தன்மையை உத்தரவாதப்படுத்தும் நிமித்தம், பணியகம் மாலைதீவு, இந்தியா, ஐ.இ மற்றும் கிழக்கு

ஆபிரிக்கா போன்ற வெளிநாடுகளில் பல்லினத்தன்மை வாய்ந்த செயற்பாடுகளிலும் மற்றும் உள்ளூர் ரீதியான போட்டிக் கேள்விகளிலும் நுழைவதற்கு உத்தேசிக்கின்றது.

ம.பொ.உ.ப ஆபிரிக்காவில் நீர்வலு மற்றும் நீர் வளங்கள் சார்ந்த கருத்திட்டங்களுக்கு பரந்தளவு நகரும் பொருட்டு கூட்டு வியாபாரப் பங்காளித்துவம் சார்ந்த சாத்தியம் பற்றி ஆராய்ந்து வருகின்றது.

எமது வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பங்களிப்பதில் தங்களது தளராத நம்பிக்கை கொண்டு உதவி ஒத்தாசைகளை நல்கிய அனைத்து மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ம.பொ.உ.ப சகல ஊழியர்களுக்கும் அவர்கள் நல்கிய பல எண்ணற்ற உதவிகளுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் எனது நன்றியைத் தெரிவித்துக். கொள்ளுகின்றேன். எமது வாடிக்கையாளர்களினதும் பங்காளிகளினதும் தொடர் ஆதரவைக் கொண்டு எதிர்காலத்தில் புதிய சவால்களை ஏற்பதற்கு ம.பொ.உ.ப எதிர்பார்க்கின்றது.

பொறியியலாளர் கே.எல்.எஸ். சகபந்து

பொது முகாமையாளர்


## பணிப்பாளர்கள் சபை பற்றிய குறிப்பு



**பொறியிய. நிகால் ரூபசிங்க**

பீஎஸ்சி. (ஆனஸ்ட்), ப.பி.ப டிப்ளோமா. (நீர்வலு மின்சாரம்) நோர்வே, சி.பொறியிய. எம்ஐஈ (இலங்கை), எம்ஐசிஈ (லண்டன்), உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்

1980 ஆம் ஆண்டு பேராதெனிய பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தின் விரிவுரையாளராக இணைந்தார். 1981 ஆம் ஆண்டு மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் இணைந்தார். 1989 முதல் 1996 வரை பிரதான வதிவிடப் பொறியியலாளராக நியமிக்கப்பட்டார். ம.பொ.உ பணியகத்தில் 1997 முதல் 1998 வரை கருத்திட்ட முகாமையாளராகத் தொழிற்பட்டார். ஈபிசி பிரிவை நிருவகிக்கும் பொருட்டு மேலதிகப் பொது முகாமையாளராக (பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாணம்) நியமிக்கப்பட்டார். 2005 ஆம் ஆண்டு ம.பொ.உ.ப/தலைவராக நியமிக்கப்பட்டார்.



**பொறியிய. எம்.ஏ.பி. ஹேமசந்திர**

எப்.ஐ.ஈ.டீ. (இலங்கை), எம்.ஐ.ஈ.ஈ, எம்.ஐ. ப்ரொட்.

பீ.சி.சி. லங்கா லிமிற்றட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர். 2010 யூன் மாதம் கொழும்பு சக் மேக்கர்ஸ் லிமிற்றட் நிறுவனம் மற்றும் இலங்கை அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர்/முகாமைப் பணிப்பாளர். மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் தொழிற்படு பணிப்பாளர்.



**திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க**

பீஎஸ்சி. முகாமைத்துவ டிப்ளோமா, எப்சிஏ, பட்டயக் கணக்காளர்.

1988 ஆம் ஆண்டில் கார்பரேட்டு விஸன் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும், 1994 ஆம் ஆண்டு பினான்ஸியல் கன்ஸல்ட்டென்ட்ஸ் என்ட் எலீட் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் இணைந்தார். 2008 ஆம் ஆண்டு மகாவலி கல்ச்ரல் பவுன்டேஷன் ட்ரஸ்ட் நிறுவனத்தில் பணிப்பாளராகவும், 2004 ஆம் ஆண்டு மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தில் பணிப்பாளராகவும் இணைந்தார். இவர் 2010 ஆம் ஆண்டு முதல் அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தினதும் மற்றும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளராக இருந்து வருகின்றார்.



**பொறியிய. எஸ்.எஸ். எதிரிவீர**

பீஎஸ்சி. பொறியிய. எம்ஐஈ (இலங்கை), சி.பொறியிய.

1972 முதல் 1991 வரை தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். ஸ்ரீ லங்கா ரெலிகம் சேர்விஸெஸ் லிமிற்றட் நிறுவனத்தின் பொது முகாமையாளராக இணைந்து, 1992 ஆம் ஆண்டு அதன் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அஸோஸியேற்றட் நிவ்ஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிற்றட் நிறுவனத்தில் இணைந்து, 2000 ஆம் ஆண்டு முகாமைப் பணிப்பாளராகத் தொழிற்பட்டார். 2001 ஆம் ஆண்டு இவர் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் பயிற்சி பற்றிய அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார். 2004 ஆம் ஆண்டு அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்றார். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஊடக மற்றும் தகவல் பொறியியல் உசாவுநராகவும், சபை உறுப்பினராகவும், மற்றும்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சபை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். ஐரீன் சபைக்கான ஆலோசகராகவும் மீண்டும் தொழிற்பட்டு வருகின்றார். 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் இவர் ம.பொ.உ பணியகத்தில் சபைப் பணிப்பாளராகவும், CESL நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் உற்பத்திப் பொறியியலாளர்கள் (லண்டன்) சங்கத்தினதும் மற்றும் மின் பொறியியலாளர்கள் நிறுவகத்தினதும் (லண்டன்) உறுப்பினர் ஆவார்.

## பணிப்பாளர்கள் சபை பற்றிய குறிப்பு (தொடர்ச்சி)



**பொறியிய. ரஞ்ஜித் பேமசிறி**

பீஎஸ்சி. பொறியிய. (ஆனஸ்ட்), எம்ஐஈ (இலங்கை), எம்எஸ்சி. (நிர்மாண முகாமைத்துவம்)

1981 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையில் நிறைவேற்றுப் பொறியியலாளராக / வதிவிடப் பொறியியலாளராக இணைந்தார். 1993 ஆம் ஆண்டு மாகாண பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் (பெருந்தெருக்கள்), உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். 1993 ஆம் ஆண்டு தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பொது முகாமையாளராகக் கடமைப் பொறுப்பை ஏற்றார். 2003 ஆம் ஆண்டு முதல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் தேசிய கருத்திட்டப் பணிப்பாளராகப் பணியாற்றினார். தற்பொழுது, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். 2010 ஆம் ஆண்டு மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.



**டாக்டர் எம்.எச்.எம்.யூ.பி. ஹேரத்**

எம்பீபீஎஸ் (கொழும்பு)

2010 ஆம் ஆண்டு முதல் ராகம புனர்ஜீவன வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியாக இருக்கின்றார். 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இவர் மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.



**திரு வசந்த ஏக்கநாயக்க**

பீ.ஏ (ஆனஸ்ட்), இலங்கை நிருவாக சேவை வகுப்பு 1

2010 ஆம் ஆண்டு முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், திறைசேரியின் பிரதிநிதியாகவும் / மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினராகவும் தொழிற்பட்டார்.

# எமது குழு

| | |
|---|---|
| பொறியிய. என்.ரூபசிங்க | தலைவர் |
| பொறியிய. எம்.ஏ.பி. ஹேமசந்திர | தொழிற்படு பணிப்பாளர் |
| பொறியிய. எஸ்.எஸ். எதிரிவீர | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| பொறியிய. கே.எல்.எஸ். சகபந்து | பொது முகாமையாளர் |
| பொறியிய. எம்.ஏ.சி. பெரேரா | கூ. மேலதிக பொ.மு (C) / மேலதிக பொ.மு (கருத்திட்டங்கள்) |
| பொறியிய. ஜி.டீ.ஏ. பியதிலக்க | கூ. மேலதிக பொ.மு (EPC), AGM (EPC-மே.மா 1) |
| பொறியிய. எல்.பி.ஜி. சில்வா | மேலதிக பொ.மு (EPC-மே.மா 2) |
| பொறியிய. ஆர்.என். பெரேரா | மேலதிக பொ.மு (விஷேட கருத்திட்டங்கள் -03) |
| பொறியிய. எஸ்.ரீ. தேவராஜன் | மேலதிக பொ.மு (விஷேட கருத்திட்டங்கள் -02) |
| பொறியிய. டப்ளியூ.ஏ. ஆரியதிலக்க | மேலதிக பொ.மு (வட பிராந்திய வீதிகள்) |
| பொறியிய. ரீ.டீ. விக்ரமரத்ன | மேலதிக பொ.மு (நீர் வளங்கள்) |
| பொறியிய. எஸ்.பி.பி. நயனக்கார | மேலதிக பொ.மு (EPC-தெற்கு) |
| பொறியிய. பி.சி. ஜினசேன | மேலதிக பொ.மு (பெருந்தெருக்கள், விமானநிலையம், பயிற்சி) |
| பொறியிய. ஜி.ஆர்.ஏ.எஸ். குணதிலக்க | மேலதிக பொ.மு (EPC-கிழக்கு) |
| பொறியிய. ஜி.ஏ.டீ.எல்.ஜே. செனவிரத்ன | மேலதிக பொ.மு (E மற்றும் M) |
| பொறியிய. ஏ. கல்கெட்டிய | மேலதிக பொ.மு (EPC-ஊவா, சபரகமுவ) |
| பொறியிய. எச்.எம். நந்தசேன | மேலதிக பொ.மு (EPC-மத்திய) |
| பொறியிய. டீ.ஆர். மித்ர | மேலதிக பொ.மு (EPC-வட மத்திய) |
| பொறியிய. (திருமதி) எச்.எம்.எஸ். ரூபசிங்க | மேலதிக பொ.மு (EPC-துணைச் சேவைகள்) |
| பொறியிய. கே.எல்.எஸ்.ஆர். சகபந்து | A/மேலதிக பொ.மு (DRD) |
| பொறியிய. எம். நவாஸ் | A/மேலதிக பொ.மு (விஷேட கருத்திட்டங்கள் -01) |
| கட்டடக்கலைஞர் டப்ளியூ.கே. லலித் ஹேவகே | மேலதிக பொ.மு (கட்டடக்கலை) |
| பொறியிய. ஆர்.எம்.டப்ளியூ. ரத்நாயக்க | அணவல் கடமைகள்/மேலதிக பொ.மு (EPC-வடக்கு) |
| பொறியிய. பி.எம்.பி.சி. குணதிலக்க | அணவல் கடமைகள்/மேலதிக பொ.மு (EPC-தென் கிழக்கு) |
| திருமதி லியனகே தேவிக்கா | பி.பொ.மு (QS) |
| திரு ஜே.எம்.பீ. ஜயவீர | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| திருமதி எஸ்.எச்.எச்.சி.யூ. சேனாநாயக்க | சட்ட அலுவலர் |
| திரு ஜே.டப்ளியூ. ரத்நாயக்க | உசாவுநர், மனித வளம் |
| திரு யூ.என்.பீ. மாவத்தாகம | நிதி முகாமையாளர் |

## கூட்டிணைந்த தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

### (1) கூட்டிணைந்த தகவல்கள்

#### 1.1 சட்ட அமைப்பும் முகவரியும்

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் ஒரு அரச கூட்டுத்தாபனமாகும். இது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிப்புப் பெற்று இலங்கையில் அமையப் பெற்றது. இந்தப் பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

#### 1.2 பிரதான செயற்பாடுகளும் இயக்க சார் செயற்பாடுகளின் தன்மையும்

ஏதாவது பொறியியல் வகையுடன் அல்லது பொறியியல் சம்பந்தப்பட்ட ஏதாவது செயற்பாட்டுடன் தொடர்பு உடைய உசாதுணை மற்றும் டேர்ன்கீ நிர்மாணம் சார்ந்த கருத்திட்டங்களைப் பொறுப் பேற்று, நிறைவேற்றும் விடயம் குறித்த ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பணியகத்தின் பிரதான செயற்பாடாக விளங்கியது.

#### 1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

குறித்த ஆண்டு இறுதியின் போது பணியகத்தில் 1861 ஊழியர்கள் (2010 ஆம் ஆண்டில் இருந்த எண்ணிக்கை 1073) இருந்தனர்.

### (2) கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1 பொதுவான கொள்கைகள்

2.1.1 கணக்குகள் தயாரித்தலின் அடிப்படை

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகத்தின் (பணியகம்) ஐந்தொகை, வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் வெளியிட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப் பட்டுள்ளன. திரண்ட நிதிக் கூற்றுக்களில் 2011 திசம்பர் 31 இற்கான பணியகத்தின் நிதிக் கூற்றுக்களும் மற்றும் மானிய விபரங்களும் அடங்குகின்றன.

மானியம் சார்ந்த நிதிக் கூற்றுக்கள் வேறு வகையில் குறிப்பிடப்படாத பணியகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.2 ஒத்தீட்டுத் தகவல்கள்

பணியகத்தினால் வழமையான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப் பட்டுள்ளன. அந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன.

நடைமுறை ஆண்டின் கணக்குகள் சமர்ப்பணத்தை உறுதிசெய்யும் நிமித்தம் தேவையான போது முன்னைய ஆண்டின் புள்ளிவிபரங்களும் மற்றும் வாசகங்களும் மீளொழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

2.1.3 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

சகல வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களும் அந்தக் கொடுக்கல் வாங்கல்கள் பயனுறுதி அடைந்த நேரத்தில் இருந்த நாணயமாற்று வீதங்களில் அதாவது இங்கு அறிக்கையிடப்படுகின்ற இலங்கை நாணயத்திற்கு மாற்றப் பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயங்களில் பெறுமானம் மதிக்கப்பட்ட பணம் சார்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அதேவிடத்து வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களிலும் மற்றும் குறித்த ஆண்டின் சமநிலைப் பெறுமானங்களிலும் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளன. இலாப நட்டப் பலாபலன்கள் வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2.1.4 வரிவிதிப்பு

நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டவாறு வருமான மற்றும் செலவின ஆக்கக் கூறுகளின் அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதனைத் தொடர்ந்து வந்த அந்தச் சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைய வருமான வரி கணிப்பிடப்பட்டுள்ளது.

2.1.5 பற்று சார்ந்த செலவுகள்

நிதிக் கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டுள்ள அதன் விற்பனைக்கு அல்லது எதிர்பார்த்த பாவனைக்கு ஆயத்தமாகுவதற்கு கணிசமான ஒரு காலத்தை எடுக்கின்ற ஒரு சொத்தின் கொள்வனவு, நிர்மாணம், அல்லது உற்பத்தி என்பவற்றுக்கு நேரடியாக ஏதுவாகுகின்ற பற்று சார்ந்த செலவின் அளவு தவிர, பற்று சார்ந்த செலவுகள் எல்லாம் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் செலவாக இனங்காணப்பட்டுள்ளன.

2.1.6 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் எழும் சம்பவங்கள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் எழுந்த சகல விதமான பொருண்மை வாய்ந்த சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் தேவையான நேரத்தில் நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப் பட்டுள்ளன.

## 2.2 திரட்டு நிதி

a) மானியம்

பணியகம் கட்டுப்படுத்திய பிரிவுகளே மானியங்களாகும். தனது செயற்பாடுகளில் இருந்து நன்மைகளை அடைவதற்காக ஒரு நிறுவனத்தின் நிதி மற்றும் இயக்க சார் கௌ்கைகளை நேரடியாக அல்லது மறைமுகமாக நிருவகிப்பதற்கான அதிகாரத்தத்துவத்தை இந்தப் பணியகம் கொண்டுள்ள நேரத்தில் கட்டுப்பாடும் காணப்படுகின்றது. அந்தக் கட்டுப்பாடு ஆரம்பமான திகதியில் இருந்து வருகின்ற திரண்ட நிதிக் கூற்றுக்களில் மானியம் தொடர்பான நிதிக் கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

மானியத்திலுள்ள முதலீடு பணியகத்தின் ஐந்தொகைச் செலவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

| கம்பனியின் பெயர் | கட்டுப்பாடு | பணிப்பாளர்கள் |
|---|---|---|
| சென்றல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 100% | திரு நிகால் ரூபசிங்க<br>திரு எம்.ஏ.பி. ஹேமசந்திர<br>திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க<br>திரு பீ.டப்ளியூ.என். ரூபசிங்க<br>திரு எஸ்.எஸ். எதிரிவீர |

b) திரண்ட நிதி அடிப்படையில் நீக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குளுக்களுக்கு இடையிலான சகல நிலுவைகள், வருமானம் மற்றும் செலவுகள், மற்றும் மாற்றப்படாத வருவாய்கள் மற்றும் நட்டங்கள், குளுக்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களின் பயனாக வரும் பங்குலாபங்கள் என்பன முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. குழு கட்டுப்பாட்டைப் பெற்ற திகதியில் இருந்து அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் திகதி வரை திரண்டநிலையில் தொடர்ந்தும் இருக்க வேண்டியவற்றின் கொள்வனவு அல்லது கூட்டிணைத்தல் திகதியில் இருந்து மானியங்கள் முழுமையான அமைப்பில் திரட்டப் பட்டுள்ளன.

c) அறிக்கையிடும் திகதி

தொடர் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்து திசம்பர் 31 இல் முடிவடையும் ஒரு ஆறு மாத காலப்பகுதிக்கு மானியம் சார்ந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

d) <u>திரண்ட காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று</u>

இதில் பணியகத்தின் காசுப் பாய்ச்சல்களும் மற்றும் அதன் மானியமும் அடங்குகின்றன.

## 2.2 சொத்துக்களின் விலைமதிப்பீடும் அவற்றின் அளவீட்டு அடிப்படையும்

### 2.3.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

2.3.1.1 செலவு - என்பது சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றினதும் மற்றும் அவற்றின் பேரிலான ஏதாவது இடர்நேர் செலவுகள் அடங்கலாக அவற்றின் கொள்வனவு அல்லது நிர்மாணம் சார்ந்த அந்தச் சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் செலவைக் குறிக்கும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன குறைந்த திரண்ட தேய்மானப் பெறுமானத்தில் / செலவில் பதியப்பட்டுள்ளன. கீழே 2.3.1.2 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அடிப்படையில் இந்தப் பெறுமானத்திற்கான அல்லது செலவுக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.3.1.2 தேய்மானம் - குறித்த தேய்மானம் தொடர்பான ஏற்பாடுகள் ஒரு குறைந்து செல்லும் நிலுவை முறையியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நோக்கம் நிமித்தம் பின்வரும் ஆண்டு வீதங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

| | **விடயம்** | **வீதம் - ஆண்டு ஒன்றுக்கு** |
|---|---|---|
| 1. | மோட்டார் வாகனங்கள், கருவிகள் மற்றும் சாதனங்கள் | 25% |
| 2. | பொறித்தொகுதிகள், இயந்திராதிகள், நிலஅளவை சார்ந்த சாதனங்கள், கணனிகள், ஆய்வுகூட மற்றும் நலன்புரி சாதனங்கள், தொலைபேசிகள் | 20% |
| 3. | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் நூலகப் புத்தங்கள் | 12.5% |
| 4. | கட்டிடங்கள் | 7.5% |

### 2.3.2 குத்தகைகள்

பணியகத்திற்கான சகல இடர்களும் உரித்துடமை வழங்கல்களும் எப்பொழுதாவது கணிசமான அளவில் மாறுகின்ற நேரம் குத்தகைகள் நிதி சார்ந்த குத்தகைகள் என வகுக்கப்படுகின்ற அதே நேரம் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு அமைய குத்தகைகளுக்காகப் பதியவும் பட்டுள்ளன.

பொறித்தொகுதிகள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் தலைப்பில் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குத்தகைப் பொறுப்புக்களின் மூலதனக் கூறுகள் நிதி சார் குத்தகைகள் தலைப்பின் கீழ் கடப்பாடுகள் எனக் காட்டப்பட்டுள்ளன. அதையொத்த சொத்துக்களுடன் இணங்கும் ஒரு அடிப்படையில் சொத்துக்களுக்கான தேய்மானம்

கணிக்கப்பட்டுள்ளது. வருமானக் கூற்றில் குத்தகை வாடகையின் வட்டிக் கூறு உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.3.3 முதலீடுகள்

ஒரு முதலீட்டுச் செலவு என்பது தரகுப்பணம், வரித்தீர்வைகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பன அடங்கலாக கொள்வனவு சார்ந்த செலவைக் கருதும். குறித்த முதலீடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு, பெறுமானம் கணிக்கப்பட்டுள்ளன:

**a) நீண்ட கால முதலீடுகள்**

குறிக்கப்பட்ட / குறிக்கப்படாத முதலீடுகள் தனியாள் முதலீட்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்ற குறைந்த சந்தைப் பெறுமானத்தில் அல்லது செலவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**b) குறுங்கால முதலீடுகள்**

குறுங்கால முதலீடுகளில் இடப்பட்ட நிதிகள் செலவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.3.4 நிகழும் மூலதனப் பணி

நிகழும் மூலதனப் பணி செலவில் கணிக்கப்பட்டுள்ளது.

2.3.5 பொருட்பதிவேடுகள்

மதிப்பிடப்பட்ட தேறிய மாறத்தகு பெறுமானத்தில் அல்லது குறைந்த செலவில் பொருட்களின் பெறுமானம் கணிக்கப்பட்டுள்ளது.

மதிப்பிடப்பட்ட தேறிய மாறத்தகு பெறுமானத்தில் அல்லது குறைந்த செலவில் ஸ்தலத்திலுள்ள மூலப்பொருட்களின் பெறுமானம் கணிக்கப்பட்டுள்ளது.

2.3.6 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், அந்த வருமதிகள் மாற வேண்டிய மதிப்பிடப் பட்ட அளவுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

2.3.7 காசும் காசு ஒப்பரவுகளும்

காசும் காசு ஒப்புரவுகளும் கையில் இருக்கும் காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் அதிக குறுங்கால திரவநிலை முதலீடுகள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன.

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றின் நோக்கத்திற்காக, கையில் இருக்கும் காசு, வங்கியிலுள்ள கேள்வி வைப்புக்கள், தேறிய நிலுவை மேலதிகப் பற்றுக்கள் என்பன காசும் காசு ஒப்புரவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 2.4.1 பொறுப்புக்கள்

கேள்வி மீதான கொடுப்பனவு அல்லது ஐந்தொகைத் திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் எழும் அந்தக் கேள்வி மீதான கொடுப்பனவு தொடர்பில் வருபவை ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஐந்தொகைத் திகதியில் இருந்து ஒரு வருடத்தின் பின்னர் எழும் கொடுப்பனவு தொடர்பில் வருபவை அந்த ஐந்தொகைகளில் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் சகல அறிந்த பொறுப்புக்களும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### 2.4.2 வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்

வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் அவற்றின் செலவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.4.3 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

**a) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை**

பணிக்கொடை என்பது திட்டவட்டமான ஒரு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் பணியகம் பணிக்கொடையைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. தொடர்ச்சியான ஐந்து வருட கால சேவைப் பூர்த்தியின் பேரில் மாத்திரமே ஊழியர்களுக்கான இந்தப் பொறுப்பு எழும்.

எனினும், 'ஓய்வூதிய நன்மைகள் சார் செலவு' எனும் 16 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு நியமத்தை அனுசரித்து சேவையின் நிதியாண்டினது இறுதி மாதத்தின் அரை மாதச் சம்பள அடிப்படையில் நிதியேற்பாடு கணிக்கப்பட்டுள்ளது.

**b) திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி**

ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்புக்கும் தகுதியான சகல ஊழியர்களும் அந்தந்த நியதிச்சட்டங்களுக்கும் மறறும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய பொருத்தமான பங்களிப்பு நிதிகளினால் அணவப்பட்டுள்ளனர்.

2.4.4 மூலதனப் பொறுப்புக்களும் மற்றும் இடைநேர் பொறுப்புக்களும்

பணியகத்தின் சகல பொருண்மை வாய்ந்த மூலதனப் பொறுப்புக்களும் இடைநேர் பொறுப்புக்களும் கணக்குகளுக்கான அந்தந்தக் குறிப்புகளில் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

## 2.5 ஒதுக்கீடுகள்

2.5.1 மூலதன ஒதுக்கீடுகள்

இது, நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டினால் உருவான ஒரு ஒதுக்கீடாகும்.

2.5.2 வருமான ஒதுக்கீடுகள்

இது, வருமானத்தின் நிமித்தம் பேணப்படுகின்ற ஒரு ஒதுக்கீடாகும்.

## 2.6 வருமான மற்றும் செலவு இனங்காணல்

2.6.1 நிர்மாணம் மற்றும் உசாதுணை சார் ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானமும் செலவும்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 13 இற்கு இணங்க, நிர்மாண சார் ஒப்பந்தங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கத்தகு நியாயமான பிரதிபலிப்புப் பெறுமானத்தில் வருமானம் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ஒப்பந்தத்தின் நிறைவு வீதத்தின் அடிப்படையில் வருமானம் இனங்காணப் பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் தன்மையைப் பொறுத்து, பின்வரும் முறையியல்களுக்கான குறிப்புகளின் மூலம் அந்த நிறைவு வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

a) மதிப்பிடப்பட்ட ஒப்பந்த சார்ந்த மொத்தச் செலவுகளை ஏற்பதற்கான திகதிக்கு நிறைவேற்றப்பட்ட பணி தொடர்பில் ஏற்பட்ட ஒப்பந்த சார் செலவு விகிதாசாரம்

b) நிறைவேற்றப்பட்ட அளவைப் பணி

வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிலும் மற்றும் வினைத்திறன் வாய்ந்த ஒரு நிலையில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றைப் பராமரிப்பதிலும் ஏற்பட்ட சகல விதமான செலவுகளும் குறித்த ஆண்டிற்கான இலாப அடைவில் வரும் வருமானத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளன.

பொதுவாக ஒப்பந்தம் சார்ந்த செயற்பாட்டிற்கு ஏதுவாக அமைகின்றதும் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஒதுக்கப்படக் கூடியதுமான நேரடியான / மறைமுகமான குறித்த ஒப்பந்தங்களுடன் நேரடியாக சம்பந்தப்படும் சகல விதமான செலவுகளும் ஒப்பந்த சார் செலவுகளில் அடங்கும்.

'நிறைவு பெறாத ஒப்பந்தங்கள்' பேரில் வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய தொகைகள்' சொத்துக்கள், செலவாகிய மிகைத் தொகைகளில் / பொறியியலாளர்கள் சான்றுபடுத்திய பெறுமானத்தில் (ஐந்தொகைத் தொகைத் திகதியில் உள்ளவாறு) இனங்காணப்பட்ட வருமதிகளைப் பிரதிபலிக்கும். அதே நேரம் 'நிறைவு பெறாத ஒப்பந்தங்கள்' பேரில் வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய தொகைகள்' பொறுப்புக்கள் இனங்காணப்பட்ட வருமதிகள் மீதான மிகையில் காணப்படும் பொறியியலாளர்கள் சான்றுபடுத்திய பெறுமானத்தை / செலவை (ஐந்தொகைத் தொகைத் திகதியில் உள்ளவாறு) பிரதிபலிக்கும்.

2.6.2 <u>வட்டி வருமானம்</u>

வட்டி வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

2.6.3 <u>ஏனைய வருமானம்</u>

வட்டி வருமானமும் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

## 2.7 இலாபங்களும் நட்டங்களும்

2.7.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் அகற்றல் மீதான தேறிய நிதி சார்ந்த பலன்கள் ஏனைய வருமானமாகக் கருதப்பட்டுள்ளன.

## கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்கீட்டு முறைமை, முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைமை, நிதி மற்றும் கணக்காய்வு சார்ந்த வருடாந்த அறிக்கையிடல் முறைமை என்பவற்றிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யும் நிமித்தம் முகாமைத்துவத்தை வலுப்படுத்துவதற்காக 2000 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நிறைவேற்று அல்லாத பின்வரும் மூன்று சபை உறுப்பினர்கள் இந்தக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் அடங்கியிருந்தனர்.

- திரு வசந்த ஏக்கநாயக்க
- திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க
- டாக்டர் எச்.எம்.யூ. ஹேரத்

❖ கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகப் பிரதிநிதிகள் அவதானிப்பாளர்களாக குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

❖ பணியகத்தின் தலைவர் மற்றும் தொழிற்படு பணிப்பாளர் ஆகியோர் விருந்தினர்களாக குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுவதில் தமது பொன்னான நேரங்களைக் கழித்தனர்.

ம.பொ.உ.ப. தலைமை அலுவலகத்தில் குறித்த ஆண்டு காலப்பகுதியில், முகாமைத்துவத்துடனான 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வுக் குழுவை வலுப்படுத்தும் நிமித்தம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றின் மூலம் பணிக்கப்பட்டவாறு ஆராய்வதற்காக பின்வரும் விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்கள்
- சகல செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றிய மீளாய்வும் மற்றும் மதிப்பீடும்
- செயலாற்றுகை பற்றிய மீளாய்வு / செலவு சார் பயன் முறைப்படுத்தல் / மோசமான செலவுகள் முதலியவற்றை ஒழித்தல்
- வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி / வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் வெளியிட்டுள்ள கடிதங்களைப் பின்பற்றுதல்
- நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றிக்கைகள் என்பன தொகுத்துப் பேணப் படுகின்றனவா மற்றும் ஒவ்வாமை பற்றி சபைக்கு அறியப்படுத்தப்படுகின்றதா என்பது பற்றி நிச்சயப்படுத்திக்கொள்ளுதல்

- நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்களை அனுசரிக்கின்றனவா என்பது பற்றி நிச்சயப்படுத்திக் கொள்ளுதல்
- உள்ளக / வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய பரிகார நடவடிக்கைகள் என்பன பற்றிய மீளாய்வு

## நிறுவாக மற்றும் ம.வ பிரிவின் செயலாற்றுகைகள்

### 1. மனித வளங்கள் பற்றிய கொள்கை:

கூட்டிணைந்த திட்டத்தில் விவரிக்கப்பட்டவாறு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான 'உலகத்தில் முதல் தர பொறியியல் நிறுவனமாக' விளங்குதல் எனும் பணியகத்தின் தூரநோக்கை அடையும் நிமித்தம் மனித வளங்கள் பற்றிய கொள்கை வகுத்தமைக்கப் படுகின்றது. தீர்மானமெடுத்தல் மற்றும் செயற்படுத்தல் நடபடிமுறை, தாபன மற்றும் நிருவாக ஆளணித் தொழிற்பாடுகளுக்கு உதவுதல், தேவையான நியமங்களில் ஊழியர்களின் செயலாற்றுகைகளைப் பேணுதல், ஊழியர்களின் உறவுகள் மற்றும் வளங்கள் திட்டமிடல் என்பவற்றைப் பேணுதல் போன்ற விடயங்கள் இந்தக் கொள்கையில் அடங்கும். பணியகம் இடர்களை சமாளித்துக்கொள்ளுவதற்கும், ஊழியர் நியமங்களிலும் மற்றும் சட்டவாக்கத்திலும் காணப்படும் இன்றைய போக்குகளைப் பேணுவதற்கும் இந்தக் கொள்கை உதவியாக அமைகின்றது. மனித வளங்களின் தர மேம்பாட்டு மூல நல்லாட்சி சார்ந்த செயல்முறைகளின் மேம்பாடுகள் மற்றும் முகாமைத்துவ மறுசீரமைப்புகள் என்பவற்றினூடாக ம.பொ.உ.ப செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. பணியகத்தின் முகாமைத்துவம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய 'சிக்கனமாக' தேவையான ஆளணியைப் பேணி வெற்றிகரமாக சமாளித்து வருகின்றது. பணியகம் முகாமைத்துவ வழிகாட்டலின் கீழ் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் தனது மனித வளங்கள் பற்றிய கொள்கையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

அக்கறையுடைய தரப்புகளுக்கு பணியகம் தனது சேவைகளை வழங்குகின்ற போது கொள்கை, உருவாக்கல், ஆலோசனை வழங்கல் மற்றும் தொடர்ச்சி எனும் நான்கு 'C' எனும் கொள்கையைப் பின்பற்றுகின்றது.

## 2. <u>மனித வலுத் திட்டம்</u>

மனித வலுத் திட்டம் பல வழிகளிலும் பணியகத்தின் சகல ஊழியர்களுக்கும் உதவியாக அமைகின்றது. ம.பொ.உ.ப சுய நிதியீட்டும் ஒரு அரச துறை நிறுவனம் என்ற ரீதியில் மானிட விடயம் அடங்கலாக வளங்களின் சிறந்த முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை அளித்து வருகின்றது. திட்டமிடல் விடயம் பிரச்சினைகளுக்கான தீர்வும் மற்றும் தீர்மானமெடுத்தல் தொடர்பான முறைமையில் சம்பந்தப்படுகின்றது. சிறந்த பங்களிப்பு நிரலில் நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்ற அதே வேளை பணியகத்தின் முகாமைத்துவம் குறுங்காலத் திறமுறைகளைத் தயாரித்து சாதனைகளை அளவிடுகின்றது. வித்தியாசமான துறைகளில் பல விஷேடமயப்படுத்தப்பட்ட ஆளணியை வாடகைக்கமர்த்தல் அடங்கலாக பல மாற்றங்களை மேற்கொள்ளுவதற்கு பணியத்திற்கு அவசியமான தேவைப்பாடுகளை அடையும் பொருட்டு பணி விஸ்தரிப்பின் மூலம் பணியகம் அக்கறையுடைய தரப்புகளின் நலனைப் பேணுகின்றது.

### 2.1 <u>ஆளணி நிலை:</u>

BOO அடிப்படையில் நிர்மாணப் பணிகளைக் கையாளுவதற்காகவும் அபிவிருத்திக் கருத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் பணியகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வகுத்தமைக்கப்படுகின்றன. அதிகமான பொறியியல் உசாதுணை, நிர்மாண ஏனைய சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கும் நிமித்தம் ம.பொ.உ.ப பல துறைகளையும் பிரதிநிதிப் படுத்துகின்ற தொழில்நுட்ப ஊழியர்களும் பல துறை சார்ந்த தொழில் தேர்ச்சியாளர்களும் ஒரு வலிமையான மனித வளத் தளத்தைக் கொண்டுள்ளது.

பொறுப்பேற்றுக்கொண்ட கருத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் நிமித்தம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒப்பந்த மற்றும் சாட்டுதல் பணி அடிப்படையில் அதிக எண்ணிக்கையான தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஊழியர்களின் உண்மையான தேவைப்பாடுகளைக் கண்டறிந்து தேவையான மொத்த மனித வலுவை இனங்காணும் வகையில் பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடும் பொருட்டு இந்தப் பணியகம் ஆண்டு ரீதியான மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுகின்றது.

பணியகத்திற்கான <u>கூட்டிணைந்த திட்டம்</u> 2011 முதல் 2016 வரையான ஒரு ஐந்து வருட காலப்பகுதிக்கு பயனுள்ளதாக அமையும். அதற்கிணங்க ஐந்து ஆண்டுகளுக்காக ம.வ திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. நிதியாண்டுகளின் பிரகாரம் எதிர்வுகூறப்பட்ட ஊழியர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு காணப்படும்.

**2011 முதல் 2016 வரை எதிர்வுகூறப்பட்ட மனித வலுத் திட்டம் (கூட்டிணைந்த திட்டம்)**

| வகுதி | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| தொழில்நுட்பம் சாராத | 730 | 750 | 850 | 900 | 950 | 1000 |
| தொழில்நுட்பம் சார்ந்த | 390 | 390 | 400 | 400 | 425 | 450 |
| மொத்தம் | 1120 | 1140 | 1250 | 1300 | 1375 | 1450 |

ம.பொ.உ.ப தற்பொழுது ஒப்பந்த மற்றும் சாட்டுதல் பணி அடிப்படையில் அதிகமான தொழில் நுட்பம் சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சாராத ஊழியர்களைப் பணிக்கமர்த்தி வருகின்றது. சில தகுதியான நபர்களை முக்கியமான பிரிவுகளில் கிடைக்கக்கூடிய நிரந்தரப் பதவிகளுக்கு உள்ளீர்க்கும் பொருட்டு ஒப்பந்த மற்றும் சாட்டுதல் பணி அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கான நேர்முகப்பரீட்சைகளை நடாத்துவதற்கு ம.பொ.உ.ப கடந்த காலத்தில் நடவடிக்கையை எடுத்துள்ளது.

ம.பொ.உ.ப மொத்தம் 1861 ஊழியர்களை 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியில் சேர்த்துக் கொண்டது. இதில் 883 ஊழியர்கள் நிரந்தர ஆளணியைப் பிரதிநிதிப் படுத்துகின்ற ஊழியர்களாவர். 978 ஊழியர்கள் ஒப்பந்த மற்றும் சாட்டுதல் பணி சார் அடிப்படையில் பணியாற்றுகின்ற ஊழியர்களாவர். நிரந்தர ஆளணியில் 40% வீதமான பதவிநிலை உத்தியோகத்தர்களும் 60% பதவிநிலை அல்லாத மற்றும் ஏனைய தரங்களைச் சேர்ந்த துணை ஊழியர்களும் காணப்படுகின்றனர். ஊழியர்களின் சராசரிப் புறழ்வு குறைந்த அளவில் காணப்பட்டது. ஓய்வுபெறும் வீதம் மொத்த ஆளணியில் 10% வீதம் ஆகும்.

## 4.0 <u>ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் SOR</u>

ம.பொ.உ.ப புதிய தகுதியான ஊழியர்களை பணியகத்தின் பால் கவர்வதிலும், ஆட்சேர்த்துக் கொள்ளுவதிலும் மற்றும் அறிமுகப்படுத்துவதிலும் வலிமையாக ஒருமுகப்படுகின்றது. இந்தப் பணியகத்தின் மனித வளத்தை வலுப்படுத்தும் பொருட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியாகுகின்ற பொறியியலாளர்கள் மற்றும் தகுதியான ஏனைய தொழில்தேர்ச்சியாளர்கள் ஆகியோர் பணியகத்திற்கு நேரடியாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். முகாமைத்துவம் பணியகத்தின் எதிர்காலத் திட்டங்களுக்குப் பொருத்தமான வகையில் பணியகத்தின் 'மனித வளங்கள்' பிரிவை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கின்றது. பணியகம் 2011 ஆம் ஆண்டு முதல் மனித வள அபிவிருத்திற்கு உரிய கவனம் செலுத்தி வருகின்றது. பணியகம் மனித வள அபிவிருத்தியில் பலவீனமான பிரிவுகளை இனங்காண்பதற்கும் பல குழுக்களை நியமித்தது.

ம.பொ.உ.ப ஆரம்பத்திலிருந்தே நெகிழாத ஆட்சேர்ப்புத் திட்டத்தைக் (SOR) கொண்டுள்ளது. பணியகத்தின் இன்றைய தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமாகவும் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் மற்றும் சம்பளப் பதவியணி ஆணைக்குழுவினதும் வழிகாட்டல்களுக்கும் இணங்க முன்னைய ஆட்சேர்ப்புத் திட்ட (SOR) ஆவணங்களில் திருத்தத்தை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அரச பங்கையும் தனியார் பங்கையும் வகிக்கும் ஒரு அரசாங்க நிறுவனம் என்ற ரீதியில் 30/ 2006 ஆம் இலக்க மு.சே.தி சுற்றறிக்கையைத் தொடர்ந்து பணியகம் தேசிய சம்பளங்கள் பதவி ஆணைக்குழுவின் (தே.ச.ப.ஆ) சிபாரிசின் பேரில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து (மு.சே.தி) அனுமதியைப் பெற்றுக் கொள்ளுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றது. பல பதவிகளின் கீழ் மு.சே.தி 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி ஆளணியின் எண்ணிக்கையை மொத்தம் 1132 ஆக அனுமதித்தது. முகாமைத்துவமும் மற்றும் ஊழியர்களும் எதிர்நோக்கிய வரையறைகளில் ஒன்றை ஒழிப்பதற்கு இது வழிவகுத்துள்ளது.

## 5.0 எதிர்காலக் கண்ணோட்டம்

### 5.1 தர வளர்ச்சி:

ஆகக்கூடிய விளைதிறனைப் பெறுவது பணியகத்தின் ஒரு முக்கிய தேவைப்பாடாகும். ஆதலால் பயிற்சிக்கான மேலதிகப் பொது முகாமையாளரின் மேற்பார்வையில் ஒரு விஷேட பயிற்சிப் பிரிவு தாபிக்கப்பட்டது. பணியகத்தின் ஊழியர்களது தொழில் சார்ந்த திறன்களை மேம்படுத்துவதில் இந்தப் பயிற்சிக் கொள்கை ஒருமுகப்படுகின்றது. பட்டப்பின்படிப்புத் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சகல தொழில்தேர்ச்சியாளர்களுக்கும் பணியகம் ஊக்குவிப்புத் தொகைகளை வழங்கி, அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உதவி வருகின்றது. தொழில் நுட்பம் சாராத பிரிவுகளிலுள்ள முகாமைத்துவ மட்ட ஊழியர்களும் பணியகத்தின் தர நியமங்களுக்குப் பொருத்தமான வகையில் பட்டப்பின்படிப்பு அல்லது உயர் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஊக்கம் அளிக்கப்படுகின்றனர். எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவை ஊழியர்கள் அடங்கலாக மொத்த ஆளணியில் துணை ஊழியர்களின் திறன்களும் வெளியீடும் 60% வீதமாக விளங்குகின்றது. இந்த ஊழியர்கள் குறுங்காலப் பயிற்சி மற்றும் நிருவாகத் தொழிற்பாடுகளிலுள்ள த.தொ.நு கூட்டிணைப்பு என்பவற்றின் மூலம் மேம்பாடு அடைகின்றனர்.

பணியகத்தினுள் தொடர்ச்சியான தொழில்தேர்ச்சி அபிவிருத்திற்கு (தொ.தொ.அ) வாய்ப்பு அளிப்பது ஊழியர்களைக் கவர்வதிலும் மற்றும் பயிற்றுவிப்பதிலும் காணப்படும் முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். மேற்குறித்த தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு பணியகம் தரமான பணி எண்ணக்கருவை அடைவதற்கு நிறுவனத்தினுள் அனைத்து ஊழியர்களும் தமது தொழில்வாண்மையை ஏற்படுத்தி, விருத்தி செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றது.

ஆக்கபூர்வமான தலைமைத்துவமுடைய ஒரு மைய நிறுவனம் என்ற ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த மனித வளங்களை இனங்கண்டு பயனுள்ள விதத்தில் அந்த வளங்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பயிற்றப்படாத அதிகமான ஊழியர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அம்சங்களைக் கொண்டு ஊழியர்களுக்குப் போதிப்பதற்காக பணியகம் மாதாந்தம் அறிவுப் பகிர்வுக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து வருகின்றது.

கூட்டிணைந்த திட்டத்தில் விவரிக்கப்பட்டவாறு பரந்த மற்றும் தீவிரப் பயிற்சிகளினூடாக ம.பொ.உ.ப தரம் வளரும் என பணியகம் நம்புகின்றது.

## 5.2 e-செயலாற்றுகை மதிப்பீடுகள்

ஊழியர்களின் விளைதிறனை மதிப்பிடும் பொருட்டு த.தொ.நு பிரிவுடன் இணைந்து செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை வகுத்தமைக்கப்பட்டது. பல காரணங்களின் நிமித்தம் இதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன. ஆனால் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தைக் கொண்டு இந்த மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை நெறிப்படுத்துவது என்பது ம.வ பிரிவுக்கு இருக்கின்ற பெரும் பிரச்சினைகளாகும். ஒரு காத்திரமான நிறுவனம் என்ற ரீதியில் பணியகம் தனது தீர்மானமெடுக்கும் நடபடிமுறையை பிராந்திய மட்டங்களுக்கு பன்முகப்படுத்தியுள்ளது. இந்தப் பொறிமுறைத் திட்டத்தை வலுப்படுத்தும் பொருட்டு தள அலுவலகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி அடங்கலாக பல முறைமைகள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கிணங்க த.தொ.நு சம்பந்தமான உபகரணங்களை வழங்கி மு.த.மு ஐ அபிவிருத்தி செய்து தலைமை அலுவலகத்தினதும் தள அலுவலகங்களிலும் பௌதீகப் பணி சார்ந்த சூழல் மேம்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டமை நாம் அடைந்த சாதனைகளில் ஒன்றாக விளங்குகின்றது. அதற்கிணங்க ஒரு வாடிக்கையாளர் நேய முறையில் வினைத்திறன், பயன், பொறுப்புத்தன்மை என்பவற்றை அனுகூலப் படுத்துவதற்கான பணி சார் நடபடிமுறை மேம்பாடுகளை அடைவதற்கு பணியகம் எதிர் பார்க்கின்றது.

2015 ஆம் ஆண்டு இறுதியளவில் வெற்றிடங்களை நிரப்புவதன் மற்றும் ஒரு மனித வளக் கணக்காய்வை மேற்கொள்ளுவதன் மூலம் ம.பொ.உ.ப நிருவாகம் சார்ந்த தொழிற்பாடுகளை நெறிமுறைப்படுத்துவது முகாமைத்துவம் பின்பற்றுகின்ற திறமுறையாக விளங்குகின்றது. அனுமதிக்கப்பட்ட ஆளணியில் நிலவிய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஊழியர்கள் தேவைப்பாடு பற்றிய வருடாந்த மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்

பட்டது. அதிகார வர்க்கங்களுக்கு இடையில் நிலவிய இடைவெளிகளை இனங்காண்பதற்கும் இது உதவியாக அமைந்தது. அதற்கிணங்க குறித்த ஆண்டு காலப்பகுதியில் போட்டிப் பரீட்சைகள் அல்லது நேர்முகப் பரீட்சைகள் அல்லது இந்த இரண்டு பரீட்சைகள் மூலமாகத் தேர்ந்தெடுத்த பொருத்தமான தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 6.0 வழங்கப்படும் நலனோம்புகை வசதிகள்

சகல அலுவலகங்களிலும் பாதுகாப்பான ஆரோக்கியமான ஒரு பணி சார்ந்த சூழலை ஏற்படுத்துவதற்கு பணியகம் தனது ஊழியர்களின் நன்மைகள் கருதி ஒரு நலனோம்புகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வருடாந்த ரீதியில் பணியகம் நலனோம்புகைக்காக 30 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி வருகின்றது. மருத்துவக் காப்புறுதி சார்ந்த செலவு மீட்புத் திட்டங்கள், ஊழியர்கள் ஒன்றுகூடல், வருடாந்த சுற்றுப் பயணம், விளையாட்டுச் செயற்பாடுகள், சமய நிகழ்ச்சிகள் முதலியன இதில் அடங்குகின்றன. ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை நிருவகித்து வருவதன் மூலம் பிள்ளைகளின் கல்வி சார்ந்த சிறப்புக்கு பணியகம் தொடர்ச்சியாக உதவி வருகின்றது. ஊழியர்களின் ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைந்த பிள்ளைகளுக்கு தொழிற்சங்கங்கள், பரஸ்பர நன்மைகள் சார்ந்த சங்கங்கள் மற்றும் ஏனைய சங்கங்கள் என்பவற்றின் கூட்டொத்துழைப்பில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. க.பொ.த சா/த மற்றும் க.பொ.த உ/த பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் நிதி சார்ந்த நன்மைகள் வழங்கப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டில் இருபத்து ஐந்து வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருந்த 72 ஊழியர்களுக்கு நீண்டகால சேவையை மதித்து விருதுகள் (தங்கப் பதக்கங்கள்) வழங்கப்பட்டன.

மருத்துவக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ள ஊழியர்களுக்கு குறுகிய கால நோய்கள் மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுதல் போன்றவற்றுக்கான உதவியாக மீளளிக்கத்தகு மருத்துவ சார் செலவுகள் திட்டத்தின் கீழ் அனைத்து ஊழியர்களுக்கும் மருத்துவக் காப்புறுதி நன்மைகள் வழங்கப்படுகின்றன. மூக்குக்கண்ணாடிகளுக்கான கொடுப்பனவுகளும் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

முகாமைத்துவ சபை வருடாந்தம் பிரகடனப்படுத்தும் மிகைவூதியங்களைப் பெறுவதற்கு சகல ஊழியர்களும் உரித்துடையவர்களாவர்.

நலனோம்புகைச் சங்கத்தினூடாக அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் விளையாட்டுச் செயற்பாடுகளும் பணியகத்தினால் ஊக்குவிக்கப்படுகின்றன. பணியகத்திற்கு மதிப்பைப் பெற்றுத்தந்து 2011 ஆம் ஆண்டிலும் பணியகத்தின் ஊழியர்கள் தொடர்ச்சியாக தேசிய கரொம் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டினர்.

## பணியகத்திற்கான விஷேட மதிப்பு:

அரசாங்கம் குறிப்பாக வட பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ‘பொறியியல் சேவைகள் வழங்குநராக’ நியமித்து பணியகத்தை கௌரவித்தது. அரசாங்கத்தினால் வட கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னர் பொறுப்பேற்று மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண மற்றும் புனர்வாழ்வு பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் எமது மனித வளங்கள் அடைந்த சாதனைகளை இட்டு ம.பொ.உ.ப பெருமைப்படுகின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ஈஎச்/எப்/சீஈசீபீ/எப்ஏ/11

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2013 யூன் 21

தலைவர்
மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

**மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் (சீஈசீபீ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், விபரமான அறிக்கையொன்று பணியகத்தின் தலைவருக்கு 2013 மார்ச் 18 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) இ.க.நி 9- காசுப்பாய்ச்சல் கூற்று

(i) செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்சலில் தேறிய இலாபம் மற்றும் சம்பந்தப்பட்ட அசைவுறாத காசுச் சீராக்கங்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் நடப்பாண்டின் தேறிய இலாபத்தில் தாக்கமளிக்காத முன்னைய ஆண்டின் சீராக்கமான ரூபா 18.7 மில்லியன் தொகை தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் பிழையாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் நம்பகமானதாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சொத்துக்களின் சேர்ப்புகள் மற்றும் கைதவிர்ப்புகள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முறையே ரூபா 313 மில்லியன் மற்றும் ரூபா 3.7 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது காசுக் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முறையே ரூபா 341 மில்லியன் மற்றும் ரூபா 42.5 மில்லியனாக இருந்தது. இப்பெறுமதிகளின் வித்தியாசங்களை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட வருமான வரியாக ரூபா 97,894,195 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் வழங்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் அது ரூபா 89,682,602 ஆக இருந்தது.

(ஆ) இ.க.நி. 13 – நிர்மாண ஒப்பந்தம்

---

(i) நியமத்தினால் வேண்டப்பட்டதன் பிரகாரம் நிர்மாண கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பணியகம் கையேற்ற ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் வெவ்வேறான பேரேட்டுக் கணக்குகள் செயற்திட்டம் பூர்த்தியடையும் வரையிலும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 350 ஆக இருந்ததுடன் இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படாத இந்த ஒப்பந்தங்களின் கிரயங்களின் கூட்டுத்தொகை ரூபா 13,564,785,693 ஆக இருந்தது. எனினும் சொத்துக்களில் குறிப்பிடத்தக்களவு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகமானது ஒப்பந்தக் கிரயம் இலாப நட்டக் கணக்கில் நேரடியாக சாட்டப்படுகின்றமையினால் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் உரிய ஒப்பந்தங்களின் திரண்ட கிரயப் பெறுமதியை காண்பிப்பதற்கு முடியாதிருந்தது. ஆகவே இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்ட

ஒப்பந்தக் கிரயமான ரூபா 6,953,482,266 தொகை முறையற்றதாக இருந்ததுடன் கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளவும் முடியாதிருந்தது.

(iv) செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் உண்மையான செயற்திட்ட செலவினம் மதிப்பீட்டுக் கிரயத்திற்கு சமமாகும். உதாரணமாக கீழே குறிப்பிடப்படுகின்ற நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்திட்டம் இல. டீ 946 இல் பூர்த்திக் கட்டம் மற்றும் உரிய வருமானம் என்பன பிழையாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

| செயற்திட்டக் குறியீடு | மதிப்பீட்டுக் கிரயம் | உள்ளவாறான கிரயம் | வேறுபாடு | கணக்கின் பிரகாரம் முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| டீ 946 | 193,290,955 | 193,046,924 | 244,031 | 100% |

(v) செயற்திட்ட இல. டீ 1232 இன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 90,604,609 ஆக இருந்ததுடன் அறிக்கையிடப்பட்ட திரண்ட கிரயம் ரூபா 91,024,211 ஆகும். அவ்வாறே அதனை சரியாக இனங்காணும் போது முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட கிரயத்துடன் உள்ளவாறான கிரயங்களின் தொகை ரூபா 93,178,372 ஆக திருத்தப்பட வேண்டியிருந்தது. ஆகவே இலாபம் 2,154,161 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டோலையில் செயற்திட்ட இல. 1230 இற்காக ஏற்பட்ட கிரயமாக ரூபா 29,129,224 தொகை பதியப்பட்டிருந்த அதேநேரம் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பட்டோலைகளின் பிரகாரம் அது 15,474,084 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே ஏற்பட்ட கிரயம் மற்றும் உழைக்கப்பட்ட இலாபம் முறையே ரூபா 13,655,140 தொகையினால் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vii) ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் செயற்திட்ட பொறியியலாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைப் பத்திரங்களில் வழங்கப்பட்டுள்ள பெறுமதி முன்னரே செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியாக உரிய கடன்பட்டோர்

கணக்கில் வரவு வைக்கப்பட்டு முன்னேற்றப்பட்டியல் கணக்கில் செலவு வைக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கணக்கீட்டுக் கொடுக்கல் வாங்கல்களினை ஆதாரப்படுத்துகின்ற செல்லுபடியான பட்டியல் இருக்கவில்லை. கடன்பட்டோரை இனங்காண்பது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

* தென் மாகாணத்தால் செய்யப்பட்ட கணக்கீட்டுச் செயற்பாடுகளின் படி, பொறியியலாளர்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,200,030,852 பெறுமதியான 16 செயற்திட்டங்களுக்காக விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் வரவுப் பெறுமதியாக ரூபா 2,172,030,852 தொகையே பதியப்பட்டிருந்தது. ஆகவே பிழையான இனங்காணலினால் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 28,000,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

* பத்தரமுல்ல வேலைத்தள அலுவலகத்தில் கடன்பட்டோர் கணக்கின் வரவுப் பெறுமதி பிழையாக இனங்காணப்பட்ட நடைமுறைகளினால் செயற்திட்ட குறியீட்டு இல. ட 869 மற்றும் தொடர்பான கடன்பட்டோர் பேரேட்டு மீதி மற்றும் உறுதிப்படுத்தல்களுக்கிடையே ரூபா 99,212,808 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(viii) நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோராக ரூபா 1,170,882,667 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவை உண்மையான கடன்கொடுத்தோர் மீதியாக இருக்கவில்லை. இவைகளுக்கு நிதி வழங்கப்பட்டிருந்தும் விலைப்பட்டியல் விநியோகிக்கப்படாமை அல்லது வேலை ஆரம்பித்தல் முற்பணம் பிழையாக கடன்பட்டோர் கணக்கில் பதியப்பட்டமை போன்ற காரணங்களினால் ஏற்பட்ட கடன்பட்டோர் செலவு மீதியாகும். எனவே நிதிக்கூற்றுக்களை உபயோகிப்பவர்கள் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் செய்யப்பட்ட பிழையான பதிவுகளின் காரணமாக தவறாக வழி நடாத்தப்படுவதைத் தவிர்க்க முடியாதிருந்தது.

செயற்திட்ட இல. 1371 மற்றும் 1434 என்பவற்றுக்காக முறையே கிடைக்கப்பபெற்ற ரூபா 5,580,560 மற்றும் ரூபா 18,991,491 ஆன வேலை

ஆரம்பிப்பு முற்பணம் பிழையாக கடன்பட்டோர் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(ix) மூல ஆவணங்கள் இல்லாமல் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் முன்னேற்றப் பட்டியல் கணக்கிற்கு பெறுமதியை செலவு வைக்கப்பட்டும் வரவு வைக்கப்பட்டும் இருந்தது. எனவே முன்னேற்றப் பட்டியல் கணக்கில் முறையே ரூபா 867,914,098 மற்றும் ரூபா 2,049,895,290 தொகையான வரவு மற்றும் செலவு மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(x) 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக முரண் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் ரூபா 84,453,062 ஆக இனங்காணப்பட்டிருந்தது. இவற்றில் ரூபா 27,581,739 தொகை மாத்திரமே வாடிக்கையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே அதிகரித்துக் காண்பிக்கப்பட்ட வருமானம் ரூபா 56,871,323 ஆகும்.

(xi) செயற்திட்ட இல. 990, 863 மற்றும் 1213 இல் ஒப்பந்தத் தொகை நியம தொழில்நுட்ப குழுவினால் (நி.தொ.கு) குறைக்கப்பட்டிருந்ததுடன் அதன் நட்ட விளைவு ரூபா 56,135,461 தொகையான நட்டம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(xii) திருத்தப்பட்ட ஒப்பந்த விலைகள், வருமான இனங்காணலின் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செயற்திட்டக் குறியீடு | ஒப்பந்தத் தொகை<br>ரூபா | நி.தொ.கு.சிபார்சு செய்த விலை<br>ரூபா |
|---|---|---|
| D990 | 570,000,000 | 541,000,640 |
| D863 | 369,459,066 | 98,569,253 |
| D1213 | 12,964,381 | 9,118,018 |

(xiii) இறுதி விலைப்பட்டியலின் பிரகாரம் ஒப்பந்தத் தொகை ரூபா 15,748,511 தொகையாக இருந்தது. ஆனால் இணைக்கப்பட்டுள்ள பட்டோலையில் செயற்திட்ட இல. 1309 தொடர்பில் ரூபா 8,859,721 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனவே ஒப்பந்த வருமானம் மற்றும் இலாபம் ரூபா 6,888,789 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இணைக்கப்பட்டுள்ள பட்டோலையில் ரூபா 2,133,529 தொகை நட்டமாக இனங்காணப்பட்டிருந்தும் அதனை இலாபமாகக் காண்பிக்க வேண்டியிருந்தது.

(xiv) 2010 செப்தெம்பர் 29 ஆந் திகதிய பூர்த்தி சான்றிதழின்படி 878 ஆம் இலக்க செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அது 2010 இன் நிதிக்கூற்றுக்களில் 88% பூர்த்தியடைந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது விலைகள் அதிகரித்த காரணத்தினால் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 972,380,185 தொடக்கம் ரூபா 1,027,170,964 வரை அதிகரிக்கப்பட்டிருந்தும் விலை அதிகரிப்புக்களை உள்ளடக்கிய ரூபா 986,799,720 பெறுமதிக்கான சான்றுகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதனால் அதிகரித்த ரூபா 40,371,244 ஒப்பந்தத் தொகைக்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(xv) செயற்திட்ட இல. 1113 இற்குரிய அளவிடைப் பட்டியல்களின் பிரகாரம் ஒப்பந்தத் தொகை ரூபா 46,927,928 ஆக இருக்க வேண்டிய அதேநேரம் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 56,286,294 எனக் கருதப்பட்டிருந்தமையினால் அந்த ஒப்பந்தத் தொகை ரூபா 9,358,366 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(xvi) செயற்திட்ட இலக்கங்கள் 1308, 1321, 1322, 1324, 1330, 1343, 1346, 1347, 1348 மற்றும் 1376 என்பன 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களுக்காக ஆண்டின் போது ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 46,597,792 ஆக இருந்ததுடன் திரண்ட மொத்தக் கிரயம் ரூபா 46,597,792 ஆக இருந்தது. அனால் இது நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டுள்ள பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 57,666,040 என பிழையாக இனங்காணப்பட்டிருந்தது. ரூபா 11,068,248

தொகையான வேறுபாடு அந்த செயற்திட்டங்களின் பூர்த்தியடைந்த கட்டங்களைக் கணிப்பீடு செய்வதற்குத் தாக்கமளித்திருந்ததுடன் அதன் காரணமாக ஒப்பந்த வருமானம் ரூபா 11,400,001 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(xvii) தெற்கு தளத்தில் 07 செயற்திட்டங்களின் ஆரம்ப மீதி பிழையாக முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக திரண்ட கிரயம் குறைவடைந்திருந்தது. ஆகவே வருமானம் ரூபா 10,696,168 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இ.க.நி. 18 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

(i) நிலையான சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த தேவைகளுக்கு முரணாக கொழும்பை அண்மித்துள்ள மற்றும் தெற்கு தளம் என்பவற்றில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு வருடத்திற்கும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு முறையே ரூபா 1,342,844 மற்றும் ரூபா 2,080,344 தொகைகளினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் ரூபா 40,339,693 தொகையான முன்கொண்டுவரப்பட்ட மீதி அகற்றப்பட்ட சொத்துக்களின் கைதவிர்ப்பு, பெறுமானத் தேய்வுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் மூலதன நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் உண்மையாகவே கைதவிர்ப்பு எதுவும் இருக்கவில்லை.

(ஈ) இ.க.நி 36 – எதிர்பாராத பொறுப்புக்களுக்கான நிதியேற்பாடு

---

நிதிக்கூற்றுக்களில் முக்கியமான எதிர்பாராத பொறுப்புக்களிற்காக பணியகத்தினால் அண்ணளவாக ரூபா 88,529,221 பெறுமதியான ஏற்பாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆலோசனை மற்றும் நிர்மாணக் கிரயம், நிர்மாணம் மற்றும் ஆலோசனை வருமானம் என்பன வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய / செலுத்த வேண்டியவை, நிறுத்தி வைத்தல்கள் மற்றும் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் என்பவற்றுடன் சம்பந்தமான விபரமான பட்டோலை மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 5,196,745,457 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டன.

(ஆ) பட்டியலில் குறிப்பிடப்படாமை, குறியீட்டு இலக்கம் இடுவதிலுள்ள வழுக்கள் மற்றும் பட்டியல் காணப்படாமையின் காரணமாக ஆலோசனைப் பிரிவில் கடன்பட்டோர் கணக்குகளில் ரூபா 71,156,925 தொகையான அசாதாரண செலவு மீதியொன்று காணப்பட்டது. இதன் விளைவாக நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் ஆலோசனை வருமானம் என்பன அதே அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரித்து மாற்றக்கூற்றில் காண்பிக்கப்படுகின்ற திரண்ட இலாப மீதி மற்றும் 2011 ஐந்தொகையில் முன்கொண்டுவரப்பட்ட வருமானச் செலவினக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 6,624,191 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிறுத்தி வைத்தல்கள்

பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாணப் பிரிவுகளின் அந்தந்த நிதிக்கூற்றுக்களில் நிறுத்தி வைத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிழக்கு மற்றும் கம்பஹா தள அலுவலகங்களில் பெறவேண்டிய நிறுத்தி வைத்தல்கள் தொடர்பாக கொடுப்பனவு சான்றிதழ்களுக்கும் நிதிக் கூற்றுக்களுக்கிடையே ரூபா 17,312,332 மொத்தமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) கிழக்கு மாகாணத்தின் 983 ஆம் இலக்க செயற்திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 517,812 ஆன நிறுத்தி வைத்தல் பணம் நிலுவையாகவுள்ள பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) பத்தரமுல்ல தளத்தின் செயற்திட்ட முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் தாள்களிற்கும் நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 14,828,414 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களில் 06 செயற்திட்டங்களுக்கான நிறுத்தி வைத்தல்கள் மாத்திரம் கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் வேலைத் தாள்களின் பிரகாரம் அது 32 செயற்திட்டங்களாக இருந்தது. எவ்வாறாயினும் ஏனைய செயற்திட்டங்களின் வேலைப் பத்திரங்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்ட கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் எவ்வளவு என கணக்காய்வின் போது சரியாகக் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(iv) பத்தரமுல்ல தள அலுவலகத்தில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 54,946,779 தொகை கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தலாக எவ்வித மாற்றமுமின்றி அசாதாரணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) செயற்திட்ட இல. 869, 1340 மற்றும் 1352 என்பவற்றிற்காக கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல்களுக்குரிய மூன்றாம் தரப்பினரின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே முறையே ரூபா 12,595,200, ரூபா 6,764,460 மற்றும் ரூபா 6,505,105 தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(vi) 07 தள அலுவலகங்களிற்காக 10% தொடக்கம் 100% வரையிலான வீச்சில் பூர்த்தியாக்கலின் கட்டமாக இனங்காணப்பட்ட நடைபெற்றுக் கொண்டிருக்கும் எண்பது செயற்திட்டங்களில் கிடைக்கவேண்டிய எந்த நிறுத்தி வைத்தல்களும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) தெற்கு தள அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் வாடிக்கையாளர்களினால் கழிக்கப்பட்ட ரூபா 33,727,423 தொகையான நிறுத்தி வைத்தல்கள் கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) தெற்கு தள அலுவலகத்தில் சான்றுபடுத்திய பட்டியல்கள் மற்றும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பேரேட்டு மீதிகள் என்பவற்றுக்கிடையே கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல்களில் ரூபா 6,610,096 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) வேலை ஆரம்பிப்பு முற்பணம்

---

பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாணப் பிரிவுகளின் (ஈபீசீ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ரூபா 3,456,388,048 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கிழக்கு மற்றும் கம்பஹா தள அலுவலகங்களில் வேலை ஆரம்பிப்பு முற்பணம் தொடர்பாக கொடுப்பனவு சான்றிதழ்களிற்கும் நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 20,009,245 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ii) செயற்திட்ட இல. 1091 மற்றும் 1400 இற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணம் முறையே ரூபா 23,725,762 மற்றும் ரூபா 2,539,056 ஆக இருந்தது. எவ்வாறாயினும் இறுதிப் பட்டியல்களில் அவை முறையே ரூபா 21,583,192 மற்றும் ரூபா 1,796,634 ஆகக் காட்டப்பட்டது. அதன் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 2,884,992 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் ஐசீரீஏடி/எஸ்பீடி/02 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 14.2(ஆ) பந்தியின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் செயற்திட்டத்தின் ஒவ்வொரு பட்டியல்களிலிருந்தும் 90% வரை அறவிடவேண்டிய போதிலும் 90% இனை விடக் குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்ட 77 செயற்திட்டங்களில்

எந்த வேலை ஆரம்பிப்பு முற்பணப் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வேலை ஆரம்பிப்பு முற்பணம் பெறப்பட்ட போது செயற்திட்டத்தின் பெறுமதியில் 90% எல்லைவரை பட்டியல் பெறுமதியிலிருந்து விகிதாசார ரீதியில் கழிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 9 தள அலுவலகங்கள் பொறுப்பேற்ற 90% தொடக்கம் 100% வரை பூர்த்தி செய்யப்பட்ட 29 செயற்திட்டங்களில் ரூபா 74,481,028 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பண மீதி பட்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட கழிப்பனவுகளுக்குரிய முறையான நாட்குறிப்புக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) பத்தரமுல்ல தள அலுவலகத்தின் செயற்திட்ட முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் தாள்களின் பிரகாரம் ரூபா 180,892,096 தொகையானது நிலுவையாகவுள்ள வேலை ஆரம்பிப்பு முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்த அதேநேரம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 82,036,187 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகவே வித்தியாசமான ரூபா 98,855,909 தொகை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(vi) தெற்கு தள அலுவலகத்தின் 12 செயற்திட்டங்களின் பேரேட்டுக் கணக்கு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல்களில் அறவிடப்பட்ட முற்பணத்திற்கிடையே ரூபா 69,912,796 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(vii) கிழக்கு தள அலவலகத்தில் வேலை ஆரம்பிப்பு முற்பணப் பட்டோலைகளில் ரூபா 17,899,373 மொத்தமான அசாதாரண வரவு மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) அட்டுறு செலவினம்

நிதிக்கூற்றுக்களில் அட்டுறு செலவினமாக ரூபா 808,805,418 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) கொழும்பை அண்மித்த, மத்திய மாகாணம் மற்றும் கட்டுபெத்த தள அலுவலகங்களில் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் முறையே ரூபா 11,077,642 , ரூபா 38,510,982 மற்றும் ரூபா 1,377,217 தொகைகள் மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோராக குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக அட்டுறு செலவினத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தன.

(ii) கொழும்பை அண்மித்த மற்றும் கட்டுபெத்த தள அலுவலகங்களில் 2012 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதியான முறையே ரூபா 5,535,510 மற்றும் ரூபா 4,118,845 தொகைகள் பிழையாக 2011 ஆம் ஆண்டின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) வேலைத் தளங்களிலுள்ள பொருட்கள்

---

2011 ஆம் ஆண்டின் இறுதியில் பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாணப் பிரிவுகளின் (ஈபீசீ) வேலைத்தளங்களில் காணப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 276,618,725 ஆக இருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கம்பஹா தள அலுவலகத்தில் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட 31 வேலைத் தலங்களில் 23 வேலைத் தலங்களின் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தது. 23 வேலைத் தலங்களின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் வேலைத் தலங்களில் இருக்க வேண்டிய பொருட்களின் பெறுமதி ரூபா 10,315,687 ஆகும். எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களில் கவனத்திற் கொள்ளப்பட்ட வேலைத் தளங்களின் பொருட்களின் பெறுமதி ரூபா 2,093,502 தொகையாக மாத்திரம் இருந்ததுடன் மூன்று வேலைத்தலங்களின் பெறுமதியை மாத்திரம் பிரதி நிதித்துவப்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கம்பஹா தள அலுவலகத்தின் இறுதியிருப்பின் பெறுமதி வேலை முடிவடைந்த சதவீதத்தைத் தீர்மானிப்பதற்காக நிர்மாணச் செலவினங்களைக் கணிப்பீடு செய்யும் போது கழிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே கிரயம் மற்றும் வருமானங்கள் முறையே ரூபா 2,093,502

இனால் குறைத்தும், ரூபா 2,126,056 இனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,151,968 தொகையான பொருட்கள் கம்பஹா பிரதி பொது முகாமையாளர் பிரிவின் நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது. எனவே கடன்கொடுத்தோர் மற்றும் இலாபம் என்பன முறையே அத்தொகையால் குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் மத்திய மாகாண நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவை (தனியார்) கம்பனிக்கு (சீஈஎஸ்எல்) ரூபா 548,000,000 தொகையான கொள்வனவு முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது வீதிச் செயற்திட்டங்களுக்காக கம்பனியினால் செய்யப்பட்ட வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) எவ்வித பதிவேட்டிலும் உள்ளடக்கப்படாது ரூபா 169,396,000 தொகையான காசுக் கொடுப்பனவிலிருந்து தாய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிக்களுக்கிடையே உள்ளகக் கம்பனிகளில் காசு நகர்வுகளில் முறையான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட முற்பணம் 2011 ஆகஸ்ட் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 வரையிலும் அது மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் சீஈஎஸ்எல் சமர்ப்பித்திருந்த வரிப் பட்டியல்களின் பிரகாரம், வழங்கப்பட்ட முற்பணமாக ரூபா 163,000,000 தொகை மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தது. ஆகவே, தாய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகளில் காண்பிக்கப்பட்ட வேறுபட்ட பெறுமதிகள் சிக்கலான நிலைமையைக் காட்டியதுடன் கணக்காய்வின் போது கொடுக்கல் வாங்கல்களின் சரியான பெறுமதியைத் தீர்மானிக்க முடியாதிருந்தது.

(iii) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் பொறுப்பேற்ற வீதிச் செயற்திட்டங்களில் மத்திய பொறியியல் கம்பனியால் சமர்ப்பித்த பட்டியல்களின் பெறுமதி ரூபா 263,500,000 ஆக இருந்த அதேநேரம் வீதிச் செயற்திட்டத்திற்காக கணக்கு வைக்கப்பட்ட பெறுமதி ரூபா 205,000,000 மாத்திரமாகும். அதன் பிரகாரம் அந்த செயற்திட்டங்களின் நிர்மாணக் கிரயம் ரூபா 58,000,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. துணைக்கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணம் மற்றும் துணைக்கம்பனிகளினால் விநியோகிக்கப்பட்ட பட்டியலின் பெறுமதி பிழையாக கணக்கு வைக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும்.

(iv) வழங்குனரிடமிருந்து பொருட்களை அறவீடு செய்வதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கோ முறையான நடவடிக்கைகளை எடுக்காது கவனத்திற்கொள்ளக் கூடிய காலமாக ரூபா 309,654,403 தொகையான கொள்வனவிற்கான முற்பணம் நிலுவையாகக் காணப்பட்டன.

(ஐ) தொங்கல் கணக்கு

---------------------------------

ரூபா 27,548,064 கூட்டுத்தொகையான ஐந்து தொங்கல் கணக்கு மீதிகள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கல் செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) வருமான வரி

--------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செலுத்த வேண்டிய மொத்த வருமானவரித் தொகை ரூபா 458,664,555 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 450,453,362 ஆக இருந்தது. இதன் காரணமாக ரூபா 8,211,193 தொகையான வேறுபாடு இனங்காணப்பட்டிருந்தது.

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ரூபா 141,711,492 தொகையான வருமானவரி மீது விதித்த தண்டப்பணம், உழைக்கும் போது செலுத்தும் வரி, பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பன நிதியேற்பாடு செய்வதற்கோ அல்லது எதிர்பாராத பொறுப்பாகவோ வெளிப்படுத்தப்பட்டோ கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம், ரூபா 304,420,640 தொகையான கடன்பட்டோர் 3 வருடங்களுக்கும் மேலான காலம் நிலுவையாக இருந்தது. எனவே நீண்ட காலம் நிலுவையாக இருந்த காரணத்தால் இக்கடனின் அறவீடு சந்தேகத்திற்குரியதாக இருந்ததுடன் கணக்குகளில் அக்கடன்களுக்காக ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உசாத்துணைப் பிரிவில் ரூபா 96,524,549 தொகையான கடன்பட்டோர் மூன்று வருடங்களுக்கும் மேலான காலம் நிலுவையாக இருந்ததுடன் அக் கடன்பட்டோருக்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்ட இலக்கம் டீ 1091 மற்றும் டீ 1400 என்பவற்றின் கடன்பட்டோர் மீதிகள் ரூபா 49,543,825 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம், அது ரூபா 52,428,816 ஆக இருந்தது. ஆகவே காலப்பகுப்பாய்வு மீதி கடன்பட்டோர் மீதியினை விட ரூபா 2,884,991 இனால் போலியாக அதிகரித்திருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொன்றுக்கும் எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| நானாவித கடன்பட்டோர் | 13,349,857 | உறுதிப்படுத்தல்கள் |
| கடன்கொடுத்தோர் | 1,170,882,667 | உறுதிப்படுத்தல்கள் |
| வியாபாரக் கடன்பட்டோர் | 3,579,649,784 | பட்டியல்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் |

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கையின் பிரதியையும் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாண இல. 154(6) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரினால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் கடமைகளை அர்த்தமுள்ள வகையில் செய்வதற்காக தேவையான சகல வசதிகளையும் வழங்குவதற்கு சகல பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கடப்பாடாகும். இருப்பினும் தொடர்ச்சியாக |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்வு செய்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் சீஈசீபீ இன் தலைமை அலுவலகத்தில் முறையான அலுவலக வசதிகளை வழங்குமாறு கோரப்பட்டிருந்தும் அது இற்றைவரையிலும் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருந்த போதும் சுற்றுநிருப அறிவுறுத்தலின் பிரகாரம் அது பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சியின் சுற்று நிருபத்தின் 8.7 ஆம் பிரிவு | உழைக்கும் போது செலுத்தும் வரி உரிய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும் 2009 தொடக்கம் 2001 வரையான மூன்று வருட காலப்பகுதிக்காக ரூபா 17,423,977 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2007 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | வரிசை அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட சிபார்சின்றி மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் 39 உத்தியோகத்தர்கள் மீளவும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர். |

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 666,487,356 ஆன நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 361,319,754 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 305,167,602 ஆன வீழ்ச்சியினைச் சுட்டிக்காட்டியது. மீளாய்வாண்டின் போது சகல மூலப்பொருட்களினதும் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது.

#### 3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகமானது மீளாய்வாண்டின் போது அதன் 1269 பதவியணியினர் மற்றும் பணியகத்தின் ரூபா 10,235 மில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்களை பயன்படுத்தி வரிக்கு முந்திய தேறிய இலாபமாக ரூபா 361 மில்லியன் தொகையினை உழைத்திருந்தது. ஆதலால் இலாபமானது பணியகத்தின் மொத்தச் சொத்தின் 3.5% ஐப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றது.

(ஆ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்குள் நிர்மாணப்பிரிவு முக்கிய இடத்தை வகித்திருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் 85% ஐயும், தேறிய இலாபத்தில் 73% ஐயும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(இ) மீளாய்வாண்டில் நிர்மாணப் பிரிவின் வருமானம் ரூபா 5,332 மில்லியனிலிருந்து ரூபா 7,598 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிட்ட போது இது 43% அதிகரிப்பாகவுள்ளது.

(ஈ) 2010 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முறையே 13% மற்றும் 11% என்பன 2011 ஆம் ஆண்டில் அவை 6% மற்றும் 4% ஆக குறைவடைந்திருந்தன.

## 3.2 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதானமாக இலங்கையின் தேசிய தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கான ஆலோசனை வேலைகளைப் பொறுப்பேற்பதற்காக 1973 இல் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் தோற்றுவிக்கப்பட்டது. கைத்தொழில்கள் கையேற்கப்பட்டதன் நோக்கத்திற்காக 1995 இல் மீளத் தோற்றுவிக்கப்பட்டதை சான்றுபடுத்துவதுடன் மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகமானது, மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், ஆலோசனை வேலைகள் தொடர்பில் முதல் ஐந்து குறிக்கோள்கள் உள்ளதுடன் அனைத்து வகையான பொறியியல் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக தேவையான அனைத்து பௌதீக மற்றும் மனித வளங்களையும் கொண்டிருந்தது. எனினும் தற்போது மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகமானது உசாத்துணையினைவிட நிர்மாண வேலைகளிலேயே பிரதான கவனம் செலுத்தியுள்ளது.

(ஆ) மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகமானது உசாத்துணை, நிர்மாணம் மற்றும் சர்வதேசம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 37,676 மில்லியன் கூட்டுமொத்த ஒப்பந்தப் பெறுமதியில் 332 செயற்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன. 2011 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில், ரூபா 26,757 மில்லியன் கூட்டு மொத்த ஒப்பந்தப் பெறுமதியுடன் 255 புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது இதில் 156 செயற்திட்டங்கள் ரூபா 5,303 மில்லியன் கூட்டு மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2011 ஆம் ஆண்டின் செயற்பாட்டு வருமானத்தில் 11% மாத்திரமே ஆலோசனைச் சேவையின் மூலம் உழைக்கப்பட்டிருந்ததுடன் மீதி நிர்மாணப் பிரிவின் மூலம் உழைக்கப்பட்டிருந்தது. அரசாங்க அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம்

(எஸ்டீஎன்சீசீ), அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் (எஸ்ஈசீ), கட்டிடத் திணைக்களம் போன்ற நிர்மாண வேலைகளைக் கையேற்கின்ற அரசாங்க பிரிலுள்ள அனேக நிறுவனங்கள் உள்ளன. ஆனால் ஆலோசனை வேலைகளைக் கையேற்றல் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தைத் தவிர அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மாத்திரமாகும். ஆதலால் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகமானது நிர்மாண வேலைகளில் வியாபாரப் புரள்வு மற்றும் வேலை அளவுகள் மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டதன் காரணமாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் ஆரம்பத்தின் போது அதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட பொறியியல் ஆலோசனைச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு உபாய வழிகள் இலக்கிடப்பட்டிருக்கவில்லை. பொறியியல் ஆலோசனைச் சேவைகளை விட ஒப்பந்த வேலைகளின் அடிப்படையில் அதிகமாக தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்ட காரணத்தினால் தேசிய முக்கியத்துவமுடைய பொறியியல் ஆலோசனைகளுக்கான அதிகாரம் கையளிக்கப்பட்ட உபாயங்கள் மற்றும் ஆபூர்வ சந்தர்ப்பங்களை பணியகம் இழக்க வேண்டியுள்ளது. ஆகவே மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகம் உண்மையாகவே இலங்கையின் தலைசிறந்த பொறியியல் ஒழுங்கமைப்பாக உருவாக்குவதற்காக இந்தப் பகுதிகளில் விசேட நிபுணர்களை உச்ச அளவில் பயன்படுத்தி பொறியியல் ஆலோசனை வேலைகளை அதிகரித்து இலக்கிட வேண்டிய அவசியத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தது.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

(அ) மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகத்தின் 12 தள அலுவலகங்களினால் பொறுப்பேற்கப்பட்ட 134 செயற்திட்டங்கள் தொடர்பான நிர்மாண வேலைகள் மீது மீளாய்வாண்டின் போது ரூபா 318,680,518 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2011 இன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 49,355,903 தொகையான வங்கி மேலதிகப்பற்று (ஓடி) காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 275,000 தொகையான மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லையெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

3.4 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுத்தி வைத்தல்களை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதியளவாக இல்லாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட 259 செயற்திட்டங்களில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 185,128,485 ஆன நிறுத்தி வைத்தல் தொடர்பான பட்டோலைகளை மீளாய்வு செய்த போது குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 19,068,277 , ரூபா 1,867,034 மற்றும் ரூபா 14,637,031 தொகைகள் முறையே ஒரு வருடம் , இரண்டு வருடங்கள் மற்றும் மூன்று வருடங்கள் என நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) நிர்மாண கைத்தொழில்களிற்காக பொருளாதார சேவைக் கட்டணம் (ஈஎஸ்சீ) காசு அடிப்படையில் செலுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய பொறியியல் மற்றும் உசாத்துணைப் பணியகத்தில் பாரிய அளவில் கணனிகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்கீட்டு முறைமைகள் மாத்திரம் கணனிமயப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவைகள் தள அலுவலகங்களின் பரீட்சை மீதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரிய எஞ்சிய சகல நடவடிக்கைகளும் கைகளின் மூலமே செய்யப்பட்டிருந்தது. இதனால் கால விரயம், வேகத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமை, தகவல்களின் சரியான தன்மை மற்றும் தரவுகளில் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் ஏன் என வினவும் போது, பாதீட்டிற்கு எதிரான முரண்கள், ஒவ்வொரு செயற்திட்டத்திற்குரிய கிரயம் மற்றும் இலாபத்தன்மை போன்றவை தொடர்பாக அவசியமான கணக்கீட்டுத் தகவல்களை முகாமைக்குப் பெற்றுக் கொள்வதற்காக ஒன்றிணைந்த கணக்கீட்டுத் தொகுதியொன்றை ஸ்தாபிக்க முடியாமையிலுள்ள மந்தநிலை பிரச்சினைக்குரியதாக எழுந்திருந்தது.

(ஈ) பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாணப் பிரிவுகளில் (ஈபீசீ) தயாரிக்கப்பட்ட திகதி குறிப்பிடப்படாமல் விலைப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) ஒப்பந்தங்களின் மதிப்பீட்டுக் கிரயத்தை தீர்மானிக்கும் முறைமை கவனத்தில் கொள்ளக்கூடியளவு ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் மதிப்பீட்டுக் கிரயத்தை கணிப்பீடு செய்யும் போது அது பொருத்தமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மதிப்பிடப்பட்ட கிரயம் அமைப்புச் செயல்முன்னேற்றக் கூட்டங்களில் முக்கியமானதாகக் கருதப்பட்டிருக்கவில்லை. ஏனென்றால் இது ஒப்பந்தத் தொகை மற்றும் உள்ளபடியான கிரயம் பற்றி மாத்திரம் கலந்துரையாடப்பட்டிருந்தது.

(எ) 2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கொள்வனவுகள் முறையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வருமான இனங்காணல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் பொறுப்பேற்கப்பட்ட 134 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 350,327,002 தொகையான நட்டம் ஏற்படும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது.

## 3.6 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்டு 2011 ஏப்ரல் மாதத்தின் போது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் விசேட அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் நிகழ்காலத்தில் காணப்படுகின்ற வளங்கள்.

*. காணி மற்றும் கட்டிடம்
* உற்பத்தி மற்றும் செயற்பாட்டு வசதிகள்

* வழங்குனர்களினதும் விற்பனையாளர்களினதும் முகாமைத்துவ முறைமை

(ii) முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவின் மீளாய்வு

(iii) திட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நேரடியாக பொறுப்புடைய முகாமையாளர்கள்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் கீழ் தொகுதித் தந்திரோபாயங்களை அமுல்படுத்தும் தலைப்புகளின் பிரகாரம் நான்கு புதிய பிரிவுகள் ஒழுங்கமைப்பாளர்களின் கீழ் செயற்படுத்துவதற்கு நிதி மற்றும் நிருவாகம் என்ற பெயரில் புதிய பிரிவு ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. மேலும் 2010 ஆம் ஆண்டின் போது பிரதி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது மேலதிக பிரதி பொது முகாமையாளர் (நிதி) என இரண்டு புதிய பதவிகளை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்கூறப்பட்ட புதிய பிரிவை ஸ்தாபித்தற்கோ அல்லது 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது தகுதியான நியமனங்களை திட்டமிடப்பட்டபடி செய்யப்பட்டமையையோ கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2011 மற்றும் 2012 இற்காக சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டங்களிலிருந்து வேறுபட்டுள்ளன. அதன் பிரகாரம் உண்மையாகவே பணியகத்திற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை காணமுடியவில்லை.

(ஈ) தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பணியகத்தின் ஒவ்வொரு வியாபாரச் செயற்பாடுகளுக்குரிய செயல்நடவடிக்கைகள் வெவ்வேறாக தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுகளுடன் எவ்வித தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பணியகத்தின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக பாவிக்கப்படாமையை சுட்டிக்காட்டியது.

**4. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிருவாகம்
(ஆ) வரி விதிப்பு
(இ) வியாபாரக் கடன்பட்டோர்
(ஈ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
(உ) முற்பணத்தைத் தீர்த்தல்
(ஊ) அட்டுறு செலவினம்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஏ) கணக்கீட்டு தேவைகளுக்கான கணனி மென்பொருள் பொதி
(ஐ) விலைப்பட்டியல் தயாரித்தல்
(ஒ) கொள்வனவுத் திட்டம்

ஒப்பம் :-எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# ஐந்தொகை

| | | பிரிவு | ம.பொ.உ.ப | |
|---|---|---|---|---|
| | | 2011 | 2011 | 2010 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 1 | 582,651,233 | 561,594,603 | 386,659,295 |
| நிகழும் மூலதனப் பணிகள் | 2 | 144,685,178 | 144,685,278 | |
| முதலீடுகள் | 3 | 64,456,627 | 64,456,647 | 69,796,710 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 791,793,139 | 770,736,529 | 456,456,005 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| நிகழும் பணி / ஸ்தலத்திலுள்ள மூலப்பொருட்கள் | 4 | 278,209,888 | 277,233,388 | 230,776,562 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | | | | |
| பற்றுக்கள் | 5 | 5,334,051,099 | 3,579,649,784 | 1,470,451,532 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டி வருமதிகள் | | 1,426,715,480 | 886,368,525 | 335,937,179 |
| கிடைக்கத்தகு பிடித்துவைத்தல் நிதி | | 913,569,758 | 913,569,758 | 604,029,563 |
| குறுங்கால முதலீடுகள் | 6 | 1,709,593,967 | 1,707,593,967 | 1,491,086,629 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| நானாவிதப் பற்றுக்கள் | 7 | 14,296,632 | 13,349,857 | 45,582,508 |
| வைப்புக்கள் | 8 | 16,020,908 | 15,420,908 | 9,383,171 |
| முற்பணங்கள் | 9 | 1,560,794,617 | 1,486,877,046 | 78,280,257 |
| ஊழியர் சார் கடன்கள் | 10 | 51,024,587 | 51,024,587 | 21,110,427 |
| பொதுத் தொங்கு கணக்கு | 11 | 1,774,849 | 1,774,849 | 6,002,695 |
| பரிமாற்றத்திலுள்ள காசு | 12 | 13,342,692 | 12,076,692 | |
| முற்கொடுப்பனவுகள் | 13 | 3,126,938 | 3,051,938 | 1,332,485 |
| வங்கி வசக்கட்டுநிதி | | | | 404,169 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 14 | 599,866,077 | 516,700,961 | 327,388,491 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 11,922,387,494 | 9,464,692,261 | 4,621,765,668 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 12,714,180,633 | 10,235,428,790 | 5,078,221,673 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | |
| **மூலதனமும் ஒதுக்கீடும்** | | | | |
| பங்களித்த மூலதனம் | | 500,000 | 500,000 | 500,000 |
| மூலதன ஒதுக்கீடு | | 12,697,552 | 12,697,552 | 12,697,551 |
| வருமான ஒதுக்கீடு | | 1,583,947 | 1,583,947 | 1,583,947 |
| வருமான செலவினக் கணக்கு | | 916,300,905 | 916,300,905 | 538,759,284 |
| தேறிய சீராக்கல் | | 18,714,345 | 18,714,345 | (38,621,767) |
| செலவினம் மீதான வருமானம் - 2011 | | 203,056,499 | 199,414,456 | 416,163,388 |
| **மொத்த மூலதனமும் ஒதுக்கீடுகளும்** | | 1,152,853,248 | 1,149,211,204 | 931,082,403 |

## ஐந்தொகை (தொடர்ச்சி)

| | | பிரிவு | ம.பொ.உ.ப | |
|---|---|---|---|---|
| | | **2011** | 2011 | 2010 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | |
| நீண்டகாலப் பொறுப்புக்கள் | | | | |
| வாகனங்கள் மீதான குத்தகைகள் | 15 | 56,443,488 | 35,900,303 | 3,382,044 |
| ஊழியர்கள் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 203,004,443 | 203,004,443 | 172,616,158 |
| பிற்போடப்பட்ட வரி | | 61,355 | | |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | 259,509,286 | 238,904,745 | 175,998,202 |
| | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| வாடிக்கையாளர்களுக்கான கொடுமதிகள் | | 2,668,802,305 | 2,218,193,918 | 605,187,286 |
| அரசாங்கத்திற்கான கொடுமதிகள் | | | | |
| செலுத்தத்தகு வருமான வரியும் பங்குலாபமும் | | 452,561,417 | 450,453,362 | 386,442,259 |
| பெ.சே.வ இற்கான ஏற்பாடு | | 70,603,584 | 22,369,832 | 104,105,894 |
| பெ.சே.வ இற்கான ஏற்பாடு 1/3 | | (377,859) | (377,859) | |
| நிறுத்திவைத்தல் வரி ஏற்பாடுகள் | | (1,744,304) | (1,744,304) | 6,575,646 |
| ஏனைய வரிகள் | | 5,326,161 | 5,326,161 | 3,913,301 |
| கடன்கள் | 16 | 1,205,643,714 | 1,170,882,667 | 984,981,872 |
| ஊக்குவிப்பும் ஏனைய முற்பணங்களும் | | 5,291,218,863 | 3,766,803,149 | 1,375,728,372 |
| ஏனைய முற்பணம் | | 9,929,273 | 9,929,273 | |
| வாகனங்கள் மீதான குத்தகைகள் | | - | - | |
| ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் நிதி | | 307,883,189 | 307,717,364 | 158,423,873 |
| நானாவிதக் கடன்கள் | 17 | 6,276,972 | 6,276,972 | 12,778,342 |
| மீளளிக்கத்தகு வைப்பு | | 14,671 | 141,671 | 152,171 |
| அட்டுறு செலவு | 18 | 1,210,423,995 | 808,805,418 | 325,593,066 |
| பொதுத் தொங்கு கணக்கு | | 25,773,215 | 25,773,215 | 610,736 |
| இடைத்தள நடைமுறைக் கணக்குகள் | | - | - | (153,711) |
| இடைக் கம்பனி நடைமுறைக் கணக்குகள் | | - | 7,406,097 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 49,355,903 | 49,355,903 | 6,801,961 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 11,301,818,100 | 8,847,312,840 | 3,971,141,068 |
| | | | | |
| மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும் | | 12,714,180,633 | 10,235,428,790 | 5,078,221,673 |

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

**யூ.என்.பீ. மாவத்தகம**

**நிதி முகாமையாளர்**

**சபைக்காகவும் சபை சார்பிலும் கையொப்பமிடப்பட்டது.**

**என். ரூபசிங்க**
**தலைவர்**

**எம்.ஏ.பி. ஹேமசந்திர**
**பணிப்பாளர்**

## நிதிக் கூற்று

| | | பிரிவு | ம.பொ.உ.ப | |
|---|---|---|---|---|
| | | 2011 | 2011 | 2010 |
| **வருமானம்** | | | | |
| நிர்மாண சார் வருமானம் | 19 | 9,974,122,653 | 7,663,814,769 | 5,104,416,122 |
| கழிக்குக - நிர்மாண சார் செலவு | 20 | 9,228,470,652 | 6,953,482,266 | 3,934,278,323 |
| **நிர்மாண சார் இலாபம்** | | 745,652,000 | 710,332,502 | 1,170,137,799 |
| உசாதுணை சார் வருமானம் | 21 | 909,829,306 | 909,829,306 | 668,174,449 |
| கழிக்குக - உசாதுணை சார் செலவு | 22 | 678,030,455 | 678,030,455 | 412,806,765 |
| உசாதுணை சார் இலாபம் | | 231,798,852 | 231,798,852 | 255,367,684 |
| நிர்மாண மற்றும் உசாதுணை சார் இலாபம் | | 977,450,852 | 942,131,354 | 1,425,505,483 |
| ஏனைய வருமானம் | 23 | 399,315,630 | 397,604,779 | 157,982,146 |
| **இயக்கசார் வருமானம்** | | 1,376,766,482 | 1,339,736,133 | |
| கழிக்குக - இயக்கசார் செலவு | | - | - | - |
| நிருவாக சார் செலவு | | | | |
| ஊழியர் சார் செலவு | 24 | 382,153,933 | 378,768,224 | 256,776,534 |
| தேய்மானம் | 25 | 130,328,711 | 123,744,368 | 79,745,529 |
| ஏனைய இயக்கசார் செலவுகள் | 26 | 347,456,628 | 327,042,638 | 489,100,108 |
| **மொத்த இயக்கசார் செலவுகள்** | | **859,939,273** | **829,555,230** | **825,622,171** |
| **இயக்கசார் இலாபம்** | | **516,827,209** | **510,180,903** | **757,865,458** |
| கழிக்குக - நிதி சார் செலவு | 27 | 15,022,528 | 14,187,675 | 19,962,066 |
| **ஏற்பாடுகளுக்கு முன்னருள்ள தேறிய இலாபம்** | | **501,804,681** | **495,993,228** | **737,903,392** |
| கழிக்குக - ஏற்பாடுகள் | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 50,277,065 | 50,277,065 | 16,690,954 |
| சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடுகள் | 28 | 84,396,410 | 84,396,410 | 54,725,082 |
| **வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம்** | | **367,131,207** | **361,319,754** | **666,487,356** |
| 2010 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டின் கீழுள்ள வரி | | 25,770,935 | 25,770,935 | |
| குறித்த ஆண்டிற்கான வரி | | 138,303,773 | 136,134,363 | 250,323,968 |
| **வரிக்குப் பின்னருள்ள தேறிய இலாபம்** | | **203,056,499** | **199,414,456** | **416,163,388** |

## ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

பிரிவு

| | மூலதனப் பங்கு | மீள்மதிப்பீட்டு வருமானம் | வருமான ஒதுக்கீடு | திரண்ட இலாபங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிலுவை - 2010 சனவரி 1 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 538,759,284 | 553,540,782 |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | 416,163,388 | 416,163,388 |
| முன்னைய காலப்பகுதிகள் சீராக்கல் | | | | (38,621,767) | (38,621,767) |
| நிலுவை - 2010.12.31 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 916,300,905 | 931,082,403 |
| நிலுவை - 2011 சனவரி 1 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 916,300,905 | 931,082,403 |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | 203,056,499 | 203,056,499 |
| முன்னைய காலப்பகுதிகள் சீராக்கல் | | | | 18,714,345 | 18,714,345 |
| **நிலுவை 2011.12.31** | **500,000** | **12,697,551** | **1,583,947** | **1,138,071,749** | **1,152,853,247** |

ம.பொ.உ.ப

| | மூலதனப் பங்கு | மீள்மதிப்பீட்டு வருமானம் | வருமான ஒதுக்கீடு | திரண்ட இலாபங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| நிலுவை - 2010 சனவரி 1 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 538,759,284 | 553,540,782 |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | 416,163,388 | 416,163,388 |
| முன்னைய காலப்பகுதிகள் சீராக்கல் | | | | (38,621,767) | (38,621,767) |
| பங்குலாபங்கள் | | | | | |
| நிலுவை - 2011.12.31 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 916,300,905 | 931,082,403 |
| நிலுவை - 2011 சனவரி 1 | 500,000 | 12,697,551 | 1,583,947 | 916,300,905 | 931,082,403 |
| குறித்த ஆண்டிற்கான தேறிய இலாபம் | | | | 199,414,455 | 199,414,455 |
| முன்னைய காலப்பகுதிகள் சீராக்கல் | | | | 18,714,345 | 18,714,345 |
| **நிலுவை - 2011.12.31** | **500,000** | **12,697,551** | **1,583,947** | **1,134,429,705** | **1,149,211,203** |

## காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| | | பிரிவு | ம.பொ.உ.ப | |
|---|---|---|---|---|
| | | 2011 | 2011 | 2010 |
| வரிவிதிப்புக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | | 367,131,207 | 361,319,754 | 666,487,356 |
| கூட்டுக: | | | | |
| (1) | தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் | 130,328,711 | 123,744,368 | 79,745,529 |
| (2) | தீராத கடன்களுக்கான ஏற்பாடுகள் | 84,396,410 | 84,396,410 | 54,725,082 |
| (3) | பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 50,277,065 | 50,277,065 | 16,690,654 |
| (4) | வங்கிக் குத்தகைகள் மீதான வட்டி | | | - |
| (5) | மேலதிகப்பற்று வட்டியும் வங்கிக் கட்டணங்களும் | 15,022,528 | 14,187,675 | 19,962,066 |
| (6) | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | 18,714,345 | 18,714,345 | (38,621,767) |
| | | **298,739,058** | **291,319,862** | **132,501,864,. 30** |
| கழிக்குக: | | | | |
| (1) | வைப்புக்கள் மீது கிடைத்த வட்டி | (397,641,261) | **(397,604,779)** | (109,258,521) |
| (2) | குறித்த காலப்பகுதி வருமான வரிக் கொடுப்பனவு + நிறுத்திவைத்தல் வரி | (97,894,195) | **(97,894,196)** | (4,827,035) |
| (3) | பணிக்கொடைக் கொடுப்பனவு | (19,888,780) | (19,888,780) | (13,575,980) |
| | | **(515,424,237)** | **(515,387,755)** | **(127,661,536)** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கசார் இலாபம்** | | **150,446,029** | **137,251,861** | **671,327,684** |
| (1) | பற்றுக்கள் அதிகரிப்பு | (3,916,710,101) | (2,161,362,010) | (590,992,241) |
| (2) | வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய தொகை அதிகரிப்பு | (1,090,778,301) | (550,431,346) | (335,937,179) |
| (3) | கிடைக்கத்தகு பிடித்துவைத்தல் நிதி அதிகரிப்பு | (309,540,195) | (309,540,195) | (604,029,563) |
| (4) | பொருட்பதிவேடுகளின் அதிகரிப்பு | (47,433,326) | (46,456,826) | (228,623,732) |
| (5) | C/F வேலைப் பெறுமானக் குறைவு | | | - |
| (6) | C/ F வேலை சார் செலவுக் குறைவு | | | - |
| (7) | பொதுத் தொங்கு கணக்குக் கடன் நிலுவை அதிகரிப்பு | 29,390,325 | 29,390,325 | (6,506,881) |
| (8) | செலுத்தத்தகு வைப்புக்கள் அதிகரிப்பு | (10,500) | (10,500) | 90,171 |
| (9) | கடன்கள் அதிகரிப்பு | 4,139,580,236 | 2,580,403,475 | 776,203,876 |
| (10) | வாடிக்கையாளர்களுக்கான கொடுமதித் தொகைகள் அதிகரிப்பு | 2,063,615,019 | 1,613,006,632 | 605,187,286 |
| (11) | செலுத்தத்தகு பிடித்துவைத்தல் நிதிகள் அதிகரிப்பு | 149,459,316 | 149,293,491 | 26,290,663 |
| (12) | அரசாங்கத்திற்கான கொடுமதிகள் அதிகரிப்பு / குறைவு | (40,787,258) | (89,021,010) | 33,291,549 |
| (13) | அட்டுறு செலவுகள் அதிகரிப்பு | 884,830,929 | 483,212,352 | 25,021,680 |
| (14) | ஊழியர் சார் கடன்களினதும் முற்பணங்களினதும் அதிகரிப்பு | (1,512,428,520) | (1,438,510,949) | (42,000,687) |
| (15) | கொடுப்பனவுகள் குறைவு | (1,794,453) | (1,719,453) | 1,463,321 |
| (16) | கிடைக்கத்தகு வைப்புக்கள் அதிகரிப்பு | (6,637,737) | (6,037,737) | (1,565,707) |
| (17) | வங்கி வசக்கட்டுநிதி, பரிமாற்றத்திலுள்ள காசு மற்றும் நடைமுறைக் கணக்குகள் என்பவற்றின் குறைவு | 557,880 | 557,880 | 6,132,353 |
| (18) | சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கான கொடுமதித் தொகைகள் அதிகரிப்பு | - | 7,406,097 | - |
| | | **341,313,313** | **260,180,226** | **(335,975,091)** |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசு உட்பாய்ச்சல்கள் (வெளிப் பாய்ச்சல்கள்)** | | **491,759,342** | **397,432,087** | **335,352,593** |

| | பிரிவு | ம.பொ.உ.ப | |
|---|---|---|---|
| | 2011 | 2011 | 2010 |
| **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசு உட்பாய்ச்சல்கள்/ (வெளிப் பாய்ச்சல்கள்)** | | | |
| (1) நிலையான சொத்துக்கள் கொள்வனவு | (368,892,654) | (341,251,681) | (120,049,938) |
| (2) நிலையான சொத்துக்கள் அகற்றல் | 42,572,006 | 42,572,006 | |
| (3) நிகழும் பணி அதிகரிப்பு | (144,685,278) | (144,685,278) | 2,279 |
| (4) முதலீடுகள் அதிகரிப்பு | 5,340,073 | 5,340,073 | (13,161,053) |
| (5) மானிய முதலீடு | 10 | (10) | |
| | **(465,665,844)** | **(438,024,891)** | **(130,931,517)** |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்** | | | |
| (1) பெற்ற கடன்கள் | | | |
| (2) குத்தகைத் தீர்ப்பனவு | 53,061,444 | 32,518,259 | (3,309,838) |
| (3) மேலதிகப்பற்றுக்கள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பவற்றின் மீது செலுத்திய வட்டி | (15,022,528) | (14,187,675) | (19,962,066) |
| (4) வங்கிக் குத்தகைகள் மீது செலுத்திய வட்டி | | | - |
| (5) கிடைத்த வட்டி | 397,641,261 | 397,604,779 | 109,258,520 |
| | **435,680,178** | **415,935,363** | **85,986,616** |
| **ஒப்புரவுகளிலும் ஒதுக்கீடுகளிலும் காணப்படும் அதிகரிப்பிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்** | | | |
| (1) மூலதன ஒதுக்கீடுகள் அதிகரிப்பு | | | - |
| **காசும் காசு ஒப்புரவுகளிலும் உள்ள தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | **461,773,676** | **375,342,559** | **290,407,692** |
| குறித்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும் | 1,811,673,159 | **1,811,673,159** | **1,521,265,466** |
| **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | **2,273,446,835** | **2,187,015,718** | **1,811,673,158** |

<u>குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும் பற்றிய பகுப்பாய்வு</u>

| | | 2011.12.31 இல் உள்ள | 2011.12.31 இல் உள்ள | 2010.12.31 இல் உள்ள |
|---|---|---|---|---|
| | | | (ரூ.) | (ரூ.) |
| வங்கியிலுள்ள காசு | கடன் வைப்புக்களும் ஒப்புரவுகளும் | 1,709,593,967 | 1,707,593,967 | 1,491,086,629 |
| | பரிமாற்றத்திலுள்ள காசு | 13,342,692 | 12,076,692 | |
| | வங்கி நடைமுறைக் கணக்குகள் | **599,866,078** | **516,700,961** | **327,388,490** |
| | வங்கி நடைமுறைக் கணக்குகள் - மேலதிகப்பற்று | (49,355,903) | (49,355,903) | (6,801,961,.00) |
| கையிலுள்ள காசு | | - | - | - |
| **தேறிய நிலுவை** | | **2,273,446,835** | **2,187,015,718** | **1,811,673,158** |

**நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் - ஐந்தொகைக் குறிப்புகள்**


- சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் 45
- நிகழும் மூலதனப் பணி, முதலீடு, நிகழும் மூலதனப் பணி/ ஸ்தலத்திலுள்ள மூலப்பொருட்கள் 46
- பற்றுக்கள் 47
- குறுங்கால முதலீடுகள் 48
- நானாவிதப் பற்றுக்கள், வைப்புக்கள் 49
- முற்பணங்கள், ஊழியர் சார் கடன்கள், பொதுத் தொங்கு கணக்கு, பரிமாற்றத்திலுள்ள காசு, கொடுப்பனவுகள் 50
- கையிலும் வங்கியிலும் உள்ள காசு 51
- வாகனங்கள் மீதான குத்தகை, கடன்கள் 52
- நானாவிதக் கடன்கள், அட்டுறு செலவுகள் 53

## நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் - வருமானக் கூற்று



- நிர்மாண சார் வருமானம், நிர்மாண சார் செலவு 55
- உசாதுணை சார் வருமானம், உசாதுணை சார் செலவு, ஏனைய வருமானம் 56
- ஊழியர் சார் செலவு, தேய்மானம், ஏனைய இயக்கசார் செலவுகள் 57
- நிதி சார் செலவு, தீராத கடனுக்கான ஏற்பாடுகள் 58

**<u>சாதனைகள்</u>**

1. ISO 9001 - 2008 தர முகாமைத்துவம் சார் சான்றிதழ்
2. நிர்மாணப் பணிக்கான ICTAD பதிவு
3. SLAB நன்மதிப்பு
4. "LMD (இலங்கை மாதாந்த சஞ்சிகை) STATE 20 அரச நிறுவனக்கு இடையில் தரப்படுத்தப்பட்டமை"
   1. 2012/2011 ஆண்டில் 13-வது
   2. 2009/2010 ஆண்டில் 10-வது
   3. 2008/2009, 2007/2008, 2006/2007 ஆகிய ஆண்டுகளில் 12-வது
5. 2004 திசம்பர் சுனாமிப் பணிக்கான பாராட்டு விருது - இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகம், இலங்கை (IESL).
6. சிறந்த பொறியியல் சேவைகள் வழங்குநர் - கூட்டிணைந்த பொறியியலாளர்கள் நிறுவகம், இலங்கை (INCO) - 2010 யூன்

**ஆண்டின் முக்கிய குறிப்புகள்**






Manik Farm
Design and Build by

Central Engineering Consultancy Bureau

Houses for Internally Displaced People after the War.



Kokavil Tower

Design and Build by

Central Engineering Consultancy Bureau

The Latest structural design of 172m high Steel Broadcasting and Communication Tower in Kokavil.





International Division

Central Engineering Consultancy Bureau

Chancellery of the Deputy High Commissioner
4 storeyed building Constructed with four partments with total floor area of 36,000 sqft

Residence for the Deputy High Commissioner
2 storeyed building of 8,000 sqft.



The building has designed to obtain "gold star" green rating from Green Building Council of Sri Lanka (GBCSL). The building comprises with a RC frame. The total Built-up area is 2,750m2









**Janakaraliya - Makkal Kalari**
**Theatre of the People**

**Central Engineering Consultancy Bureau**

Janakaraliya is a mobile cultural theatre that uses a collapsible theatre and travels through districts with its theatre group. It provide the area with a cultural hub during its stay, using drama and theatre, with other art forms for social harmony. It implements human development activities using drama and theatre at the grass root level as well as the higher level of the society.



cecb



**Mihikatha Medura**
**EPC Division - Battaramulla**


**Central Engineering Consultancy Bureau**

Construction of proposed building for Land Commissioner General's Department, Land Settlement Department and Ministry of Land and Land Development.

This office building of 4 stories, having a total floor area of 10,400 sqm. with basement floor area of 2,100 sqm. was constructed on a design and building basis.







Mapanga Mini Hydropower Project

International Division

Central Engineering Consultancy Bureau

CECB is providing local counterpart staff to the client in the fields of Geotechnical Engineering, Geology and Tunneling.




Northern Road Rehabilitation will improve the main roads to two lane highway. NRRP will cover approximately 500km of "National Roads" in the Northern & North Central Provinces. This will rehabilitate roads AB020, AB032, AB016, AB018, A009, A032, B297, B334, B296 etc...

**திறமுறை:** ம.பொ.உ பணியகத்திற்கு அதன் குறிக்கோள்களை அடைவதற்கும் பணியை நெறிப்படுத்துவதற்கும் உதவுதல்.

**ஏன் ஆரம்பிக்கப்பட்டது**

அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய மொனராகலை, பதுளை, கண்டி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அவசர அடிப்படையில் வீதிகளின் புனர்நிர்மாணத்திற்கான கருத் திட்டங்களைப் பொறுப்பேற்று நிறைவேற்றுவதற்கு ம.பொ.உ.ப தேவைப்படுத்தப்படுகின்றது. பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில் வீதி நிர்மாணப் பணிகளில் பயன்படுத்துவதற்காக அரசாங்கம் ஏற்கெனவே ம.பொ.உ. பணியகத்திற்கு 4.6 பில்லியன் ரூபா பெறுமதியான இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் சார்ந்த உதவியை வழங்கியுள்ளது. பணியைத் துரிதப்படுத்தவும் நெறிப்படுத்தவும் நிமித்தம் இந்தப் பணிகள் ம.பொ.உ. பணியகத்தினால் CESL நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள் என்பவற்றின் மொத்த இயக்கச் செயற்பாடுகளும் இந்த CESL நிறுவனத்தினால் பொறுப் பேற்கப்பட்டுள்ளன.

**ஸ்தாபிப்பு:** வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம் (CESL) ப.பொ.உ பணியகத்திற்குச் சொந்தமான முழுமையான ஒரு துணைக் கம்பனியாகும். இது 198 இன் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16 ஆம் திகதி ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டது. இது 2011 ஆம் ஆண்டில் இதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

**CESL நிறுவனம் ஒருமுகப்படும் முக்கிய குறிக்கோள்கள்**

- சிவில், மின்சாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடல் சார் பொறியியலாளர்கள் உள்ளிட்ட ஒரு பணியகம் என்ற ரீதியிலும், ஒரு கூட்டிணைந்த உறுப்புரிமைத் தரப்பு அல்லது ஒரு கூட்டு வியாபார ஸ்தாபன உறுப்புரிமைத் தரப்பு என்ற ரீதியிலும் இதன் சொந்த அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்தில் இதனுடன் சம்பந்தமான அல்லது இதற்குரிய சகல துணை அல்லது இடைநேர் அம்சங்களையும், மற்றும் சிவில், மின்சாரம், எந்திரவியல் சார் பொறியியல் ஆகிய துறைகளிலுள்ள

வடிவமைப்பு-நிர்மாணம், டேன்கீ ஆகிய விடயங்களையும் ஏனைய வகை நிர்மாணப் பணிகளையும் பொறுப்பேற்று நிறைவேற்றும் அலுவல்களை மேற்கொள்ளுதல்.

- சிவில், மின்சாரம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடல் சார் பொறியியலாளர்கள் உள்ளிட்ட ஒரு பணியகம் என்ற ரீதியிலும், ஒரு கூட்டிணைந்த உறுப்புரிமைத் தரப்பு அல்லது ஒரு கூட்டு வியாபார ஸ்தாபன உறுப்புரிமைத் தரப்பு என்ற ரீதியிலும் இதன் சொந்த அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்தில் இதனுடன் சம்பந்தமான அல்லது இதற்குரிய சகல துணை அல்லது இடைநேர் அம்சங்களையும், அதே போன்று பொறியியல் துறைகள் போன்ற திட்டமிடல், வடிவமைப்பு, நிர்மாண மேற்பார்வை போன்ற விடயங்களையும் மற்றும் இயக்கப் பணிகள் என்பவற்றுக்கான ஒப்பந்தங்களையும் பொறுப்பேற்று நிறைவேற்றும் அலுவல்களை மேற்கொள்ளுதல்.

- சிவில், மின்சாரம், எந்திரவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றாடல் சார் பொறியியல் துறைகளிலும் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வளங்கள் முகாமைத்துவம் ஆகிய துறைகளிலும் கருத்திட்ட முகாமைத்துவப் பணியையும் ஒரு கூட்டிணைந்த உறுப்புரிமைத் தரப்பு அல்லது ஒரு கூட்டு வியாபார ஸ்தாபன உறுப்புரிமைத் தரப்பு என்ற ரீதியிலும் இதன் சொந்த அல்லது இலங்கையில் அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்தில் இதனுடன் சம்பந்தமான அல்லது இதற்குரிய சகல துணை அல்லது இடைநேர் அம்சங்களையும் பொறுப்பேற்று மேற்கொள்ளுதல்.



## CESL பணிப்பாளர்கள் சபை



பொறியிய. நிகால் ரூபசிங்க

பீஎஸ்சி. (ஆனஸ்ட்), ப.பி.ப. டிப்ளோமா. (நீர் வலு) நோர்வே, சி. பொறியிய. எம்ஐஈ (இலங்கை), எம்ஐசிஈ (லண்டன்), உத்தரவு பெற்ற நிலஅளவையாளர், CESL முகாமைப் பணிப்பாளர்



பொறியிய. எஸ்.எஸ். எதிரிவீர

பீஎஸ்சி. பொறியிய. எம்ஐஈ (இலங்கை), சி. பொறியிய. CESL நிறைவேற்றுப் பணிப்பாளர்




பொறியிய. ஜி.எச். பத்மசிறி

பீஎஸ்சி. பொறியிய. சி. பொறியிய. எம்ஐஈ (இலங்கை), எம்ஐசிஈ (லண்டன்), ப.பி.ப. டிப்ளோமா (ஹைட்ரோலிக்), ப.பி.ப. டிப்ளோமா (நிர்மாண முகாமைத்துவம்), ம.பொ.உ.ப பணிப்பாளர்



**பொறிய்ய. கே.எல்.எஸ். சகபந்து**

**பீஎஸ்சி. பொறியிய. (ஆனஸ்ட்), ப.பி.ப. டிப்ளோமா (ஹைட்), எம்எஸ்சி. (நிர்மாணப் பொறியியல்), சி.பொறியிய. எம்ஐஈ (இலங்கை), எம்ஐசிஈ (லண்டன்), எம். நிர்மாண. (இலங்கை), எம்எஸ்எஸ்ஈ (இலங்கை), CESL பணிப்பாளர்**



பொறியிய. எம்.ஏ.பி.
ஹேமசந்திர

எப்.ஐ.ஈ.டீ (இலங்கை)
எம்.ஐ.ஈ.ஈ, எம்.ஐ. ப்ரொட்.
ஈ, CESL பணிப்பாளர்



திரு எஸ்.எம்.என்.எல்.
சேனாநாயக்க

பீஎஸ்சி. முகாமைத்துவ
டிப்ளோமா. எப்ஏசி. இவர்
103 1/3, டி மெல்
மாவத்தை, சந்தனம் வீதி,
கொழும்பு 01 எனும்
முகவரியில் அமைந்துள்ள
டியூடெர் வி. பெரேரா
என்ட் கம்பனியின்
(பட்டயக் கணக்காளர்கள்)
பட்டயக்கணக்காளர்,
CESL பணிப்பாளர்



பொறியிய. ஜி.டீ.ஏ.
பியதிலக்க

பீஎஸ்சி. பொறியிய.
ப.பி.ப. டிப்ளோமா.
(நிர்மாண
முகாமைத்துவம்), ப.பி.ப.
டிப்ளோமா. (நோர்வே), சி.
பொறியிய. எம்ஐஈ
(இலங்கை), எம்ஏஎஸ்சிஈ,
CESL பணிப்பாளர்

கூட்டிணைந்த தகவல்கள்

**கம்பனியின் பெயர்**

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் (ம.பொ.உ.ப)

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**

415, பௌத்தலோக்க மாவத்தை,

கொழும்பு 07.

தொலைபேசி: +94112668800,+94112696217

தொலைநகல்: +94112687487

மின்னஞ்சல் முகவரி: cecb@slt.lk

இணையத்தள முகவரி: www.cecb.lk

**சட்ட அமைப்பு**

ம.பொ.உ.ப 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில்கள் கூட்டுத்தாபச் சட்டத்தின் ஏற்பாடுகளின் தாபிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபை**

பொறியிய. நிகால் ரூபசிங்க

பொறியிய. எம்.ஏ.பி. ஹேமசந்திர

திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க

பொறியிய. எஸ்.எஸ். எதிரிவீர

பொறியிய. ரஞ்ஜித் பேமசிறி

டாக்டர் எம்.எச்.எம்.பி.யூ. ஹேரத்

திரு வசந்த ஏக்கநாயக்க

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகம்

இலக்கம் 306/72

பொல்துவ வீதி

பத்தரமுல்ல.

கூட்டிணைந்த தகவல்கள்

**கம்பனியின் பெயர்**

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம் (ம.பொ.உ.ப)

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**

415, பௌத்தலோக்க மாவத்தை,

கொழும்பு 07.

தொலைபேசி: +94112668800,+94112696217

தொலைநகல்: +94112687487

மின்னஞ்சல் முகவரிl: cecb@slt.lk

இணையத்தள முகவரி: www.cecb.lk

**சட்ட அமைப்பு**

ம.பொ.உ.ப 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில்கள் கூட்டுத்தாபச் சட்டத்தின் ஏற்பாடுகளின் தாபிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபை**

பொறியிய. நிகால் ரூபசிங்க

பொறியிய. எம்.ஏ.பி. ஹேமசந்திர

திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க

பொறியிய. எஸ்.எஸ். எதிரிவீர

பொறியிய. ரஞ்ஜித் பேமசிறி

டாக்டர் எம்.எச்.எம்.பி.யூ. ஹேரத்

திரு வசந்த ஏக்கநாயக்க

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அலுவலகம்

இலக்கம் 306/72

பொல்துவ வீதி

பத்தரமுல்ல.